திசைகள்

PP19723/10/2022(035349)

THISAIGAL

வாய்மையின் வழிகாட்டி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ ஆண்டு புரட்டாசி மாதம் ஹிஜிரி 1447 முஹர்ரம்

• Weekly Edition - OCTOBER 2026 - RM 3.00 •

நெருப்பு வளையத்திற்குள் மலேசியா

மலேசியாவை நோக்கி நகரும் கடுமையான வெப்பமும் வறட்சியும் புதிய எச்சரிக்கையை ஏற்படுத்தியுள்ளன. அக்டோபர் முதல் டிசம்பர் வரை 'சூப்பர் எல் நினோ' நிலையை எட்டும் வாய்ப்பு 90 விழுக்காட்டுக்கும் அதிகம் என மெட்மலேசியா தெரிவித்துள்ளது. தண்ணீர் பற்றாக்குறை, காட்டுத்தீ, புகைமூட்டம் என அடுத்து வரும் மாதங்கள் மலேசியாவுக்கு எத்தகைய சவால்களை உருவாக்கும்?

விரிவான செய்தி உள்ளே.....

2027 பட்ஜெட்: சுமை குறையுமா? வாழ்க்கை மாறுமா?

விலைவாசி, உணவு, வீடு, போக்குவரத்து, கல்வி, மருத்துவம் என குடும்பங்களின் செலவுச் சுமை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், மக்களின் எதிர்பார்ப்பு 2027 பட்ஜெட் மீது குவிந்துள்ளது. அக்டோபர் 9 ஆம் தேதி தாக்கல் செய்யப்படும் பட்ஜெட், மக்களின் அன்றாடச் சுமையை எந்த அளவுக்குக் குறைக்கும்? வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும் புதிய நடவடிக்கைகள் என்ன? மக்கள் உணரக்கூடிய மாற்றத்தை இந்த பட்ஜெட் உருவாக்குமா?

விரிவான செய்தி உள்ளே...

பேரா மாநில ஆலய நிலப்பட்டாவுக்கு தீர்வு எப்போது?

ஆண்டுகள் கடந்தும் நிலப்பட்டா இன்றி தவிக்கும் பேரா மாநில ஆலயங்களின் பிரச்சினைக்கு தீர்வு காண புதிய முயற்சி. ஆலயங்களின் நில உரிமையை உறுதிப்படுத்துவதில் நீடிக்கும் தடைகள் என்ன? அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து டத்தோ அ. சிவநேசன் முன்வைக்கும் முக்கிய தகவல்கள் என்ன? விரிவான செய்தி உள்ளே.....

நஜீப்பின் வீட்டுக்காவல் எப்படி இருக்கும்?

முன்னாள் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் ரஸாக்கின் எஞ்சிய சிறைத் தண்டனையை வீட்டுக்காவலில் அனுபவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இந்த வீட்டுக்காவல் எப்படி இருக்கும்? கண்காணிப்பு, நடமாட்டம் உள்ளிட்ட கட்டுப்பாடுகள் என்ன? வீட்டுக்காவல் அமலுக்கு வருவதற்கு முன் இன்னும் என்னென்ன நடவடிக்கைகள் உள்ளன?

விரிவான செய்தி உள்ளே.....

மலாக்கா: 28 தொகுதிகள் அடுத்த ஆட்சி யார் கையில்?

மலாக்கா சட்டமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில், 28 தொகுதிகளுக்கான தேர்தல் களம் தயாராகிறது. கடந்த தேர்தலில் 21 இடங்களை வென்ற பாரிசான் நேஷனல், 5 இடங்களை வென்ற பக்காத்தான் ஹராப்பான், 2 இடங்களைப் பெற்ற பெரிக்காத்தான் நேஷனல் என அரசியல் கணக்கு தெளிவாக உள்ளது.

விரிவான செய்தி உள்ளே.....

தலையங்கம்

மக்களின் வாழ்க்கையை மாற்றுமா 2027 பட்ஜெட்?

அக்டோபர் 9. மலேசியாவின் பொருளாதாரப் பாதையில் மற்றுமொரு முக்கிய நாளாக அமையப் போகிறது. பிரதமரும் நிதி அமைச்சருமான டத்தோ ஸ்ரீ அன்வார் இப்ராஹிம், 2027 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யவிருக்கிறார். அரசாங்கத்தின் கொள்கைகள், நாட்டின் பொருளாதாரத் திட்டங்கள், வருவாய் மற்றும் செலவினங்கள் எனப் பல அம்சங்கள் அந்தப் பட்ஜெட்டில் இடம்பெறும். ஆனால், ஒரு சாதாரண குடும்பத்திற்கு அதைவிட முக்கியமான கேள்வி ஒன்றுதான் இருக்கிறது. ‘‘இந்தப் பட்ஜெட் எங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றப் போகிறது?’’

ஒரு குடும்பத்தின் மாத வருமானம் காகிதத்தில் உயர்ந்திருக்கலாம். ஆனால் சந்தைக்குச் செல்லும்போது உணவுப் பொருட்களின் விலை, வீட்டுக் கடன் அல்லது வாடகை, மின்சாரம், தண்ணீர், பெட்ரோல், வாகனப் பராமரிப்பு, பிள்ளைகளின் கல்வி, மருத்துவச் செலவு என ஒவ்வொன்றும் வருமானத்தை விழுங்கிக் கொண்டிருந்தால், அந்த உயர்வு எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும்? பொருளாதார வளர்ச்சியின் உண்மையான அர்த்தம், இந்தக் கேள்விக்கான பதிலில்தான் இருக்கிறது.

2027 பட்ஜெட்டுக்கான நிதி அமைச்சின் முன்-பட்ஜெட் அறிக்கையும் இதை உணர்ந்திருக்கிறது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவின் அழுத்தத்திலிருந்து குடும்பங்களைப் பாதுகாப்பதும், மக்களின் வருமானத்தை உயர்த்துவதும் பட்ஜெட்டின் முக்கிய நோக்கங்களில் இடம்பெற்றுள்ளன. உணவு, வீடு, போக்குவரத்து, சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளின் செலவுகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வெறும் அரசாங்க ஆவணத்தில் இடம்பெறும் சொற்களாக இல்லாமல், மக்களின் அன்றாட வாழ்க்கையில் வெளிப்படும் நடவடிக்கைகளாக மாற வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு. ஏனெனில், விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசும்போது பெரிய பொருளாதாரக் கணக்குகளைப் புரிந்து கொள்ளாத ஒரு குடும்பத்திற்குக்கூட அதன் தாக்கம் நன்றாகத் தெரியும். மாதத்தின் கடைசி வாரத்தில் மளிகைப் பொருட்களை வாங்குவதற்கே கணக்குப் போட வேண்டிய நிலை ஏற்பட்டால், அந்தக் குடும்பத்திற்கு பொருளாதார வளர்ச்சி பற்றிய புள்ளிவிவரங்கள் ஆறுதலாக இருக்காது.

குறிப்பாக நடுத்தர வருமானக் குடும்பங்களின் நிலையைப் புறக்கணிக்கக் கூடாது. சமீபத்திய ஊடக அறிக்கைகளில் பொருளாதார நிபுணர்கள் B40 குடும்பங்களின் வருமான வரம்பு, வரிச் சலுகைகள் மற்றும் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு குறித்து கவனம் செலுத்தியுள்ளனர். சம்பள உயர்வு, விலைவாசி உயர்வை ஈடுகட்டாதபோது நடுத்தர வருமானக் குடும்பங்களும் நிதி அழுத்தத்துக்குள் சிக்குகின்றன என்பது அவர்களின் கருத்தாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே காரணத்தால், அரசாங்க உதவித் திட்டங்களின் வரம்புகளையும் மீண்டும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. குறிப்பிட்ட வருமான வரம்பைச் சற்றே கடந்துவிட்டதால் உதவி கிடைக்காமல் போகும் குடும்பங்கள் இருக்கலாம். அதேவேளையில், வருமானம் குறைவாக இருந்தாலும் குடும்பத்தில் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களின் உண்மையான சுமை வேறுபட்டதாக இருக்கலாம். STR, SARA போன்ற உதவிகளுக்கான தகுதி விதிகளை M40 குடும்பங்களின் நிலையை கருத்தில் கொண்டு நுணுக்கமாக மாற்ற வேண்டும் என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, உதவித்தொகை என்பது வெறுமனே ஒரு தொகையை வழங்கிவிட்டு முடித்துவிடும் நடவடிக்கையாக இருக்கக் கூடாது. அது உண்மையில் அதிகம் தேவைப்படுபவர்களைச் சென்றடைகிறதா என்பதே முக்கியம். விண்ணப்ப நடைமுறை எளிதாக இருக்க வேண்டும்; தகுதியுள்ளவர்கள் தகவல் தெரியாமல் உதவியைத் தவறவிடக் கூடாது; குடும்பத்தின் உண்மையான நிதிச் சுமையும் கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

மானியங்களைப் பற்றியும் இதே சமநிலையான அணுகுமுறை தேவை. அரசாங்கத்திடம் வரம்பற்ற நிதி இல்லை என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம். எல்லாவற்றுக்கும் மானியம் வழங்குவது நீண்டகாலத் தீர்வாக இருக்க முடியாது. ஆனால் மானியச் சீர்திருத்தத்தின் பெயரில் சாதாரண மக்களின் வாழ்க்கைச் செலவு திடீரென அதிகரிக்காத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்க வேண்டும். மானியத்தை குறைப்பதா அல்லது அதிகரிப்பதா என்பது மட்டுமே கேள்வி அல்ல; அதன் மூலம் கிடைக்கும் சேமிப்பு மக்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் முக்கியம்.

உண்மையில், 2027 பட்ஜெட்டுக்கான அரசாங்கத்தின் சொந்த ஆலோசனைத் தளத்திலேயே வாழ்க்கைச் செலவு மற்றும் மக்கள் உதவி தனி முக்கியத்துவத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது. அன்றாட உணவுப் பொருட்கள், வீட்டு வாடகை அல்லது கடன், போக்குவரத்து, பெட்ரோல், வாகனப் பராமரிப்பு, மின்சாரம், தண்ணீர், இணையம், மருத்துவச் செலவு போன்றவை மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய அழுத்தங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளன.

இதனால், 2027 பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் எத்தனை அறிவிக்கப்படுகின்றன என்பதைவிட, ஏற்கெனவே உள்ள திட்டங்கள் மக்களிடம் எவ்வாறு சென்றடைகின்றன என்பதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஒரு நல்ல திட்டம் காகிதத்தில் அழகாக இருப்பதாலேயே வெற்றி பெற்றுவிடாது. அது உரிய நபரிடம், உரிய நேரத்தில், தேவையான அளவில் சென்றடையும்போதுதான் அதன் மதிப்பு வெளிப்படும்.

அதே நேரத்தில், மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான நிரந்தர வழி உதவித்தொகைகளை அதிகரித்துக் கொண்டே இருப்பது மட்டும் அல்ல. நல்ல சம்பளம் கிடைக்கும் வேலைகள், திறன் மேம்பாடு, சிறு தொழில்களுக்கு வாய்ப்புகள், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு, குடும்பங்களின் வருமானத்தை உயர்த்தும் பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவையும் அவசியம். மக்களின் கைகளில் பணம் இருக்க வேண்டும்; அந்தப் பணத்தின் மதிப்பும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அரசாங்கம் ஒருபுறம் நிதி ஒழுங்கையும் நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. மறுபுறம், அந்த ஒழுங்கின் சுமை சாதாரண மக்களின் தோள்களில் அதிகமாக விழாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும் உள்ளது. இந்த இரண்டிற்கும் இடையே சமநிலையை உருவாக்குவதுதான் 2027 பட்ஜெட்டின் மிகப் பெரிய சோதனையாக இருக்கும்.

ஒரு பட்ஜெட்டின் வெற்றியை அதன் மொத்த ஒதுக்கீட்டின் அளவால் மட்டும் அளவிட முடியாது. அடுத்த ஆண்டு ஒரு தாயால் தனது குடும்பத்திற்குத் தேவையான உணவைச் சற்றுக் குறைந்த கவலையுடன் வாங்க முடிகிறதா? ஒரு தந்தையால் வீட்டு செலவுகளையும் பிள்ளைகளின் கல்விச் செலவையும் சமாளிக்க முடிகிறதா? ஒரு இளம் குடும்பத்தால் வீடு, போக்குவரத்து, குழந்தைப் பராமரிப்பு ஆகியவற்றைச் சமநிலைப்படுத்த முடிகிறதா? இத்தகைய கேள்விகளுக்கான பதில்களில்தான் பட்ஜெட்டின் உண்மையான வெற்றி இருக்கிறது.

அக்டோபர் 9 அன்று நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரிங்கிட்டும், இறுதியில் மக்களின் வாழ்க்கையில் எவ்வாறு பிரதிபலிக்கிறது என்பதையே நாம் கவனிக்க வேண்டும். பட்ஜெட் என்பது அரசாங்கத்தின் கணக்குப் புத்தகம் மட்டுமல்ல; அது மக்களின் வாழ்க்கைக்கான அரசாங்கத்தின் வாக்குறுதியும் கூட. அந்த வாக்குறுதி மக்களின் சமையலறையிலும், வீட்டு வரவு-செலவுக் கணக்கிலும், பிள்ளைகளின் எதிர்காலத்திலும் தெரியும் போதுதான் 2027 பட்ஜெட் உண்மையான மக்கள் பட்ஜெட்டாக மாறும்.

இ.எம்.சாமி,
ஆசிரியர், திசைகள்.

மலாக்காவில் தேர்தல் மணி அடித்துவிட்டது. ஆனால் இந்த முறை 28 சட்டமன்றத் தொகுதிகளுக்கான போட்டி, கடந்த தேர்தலைப் போல ஒரு நேரடியான அரசியல் கணக்காக இருக்கப் போவதில்லை. யார் யாருடன் கைகோர்க்கிறார்கள், எந்தக் கட்சி எந்தத் தொகுதியில் போட்டியிடுகிறது, எதிரணி வாக்குகள் எவ்வாறு அமைகின்றன என்பதே தேர்தல் களத்தின் புதிய கணக்காக மாறியுள்ளது. மலாக்கா சட்டமன்றம் செப்டம்பர் 23-ஆம் தேதி கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாநிலம் 16-ஆவது சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்குகிறது. தற்போது அந்த மாநிலத்தில் அரசியல் களம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது. இந்த முறை முக்கியமாகப் பேசப்படுவது கூட்டணி கணக்குதான்.

28 தொகுதிகள்... அடுத்த ஆட்சி யார் கையில்?

2021-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பாரிசான் நேஷனல் 28 தொகுதிகளில் 21 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது. பக்காத்தான் ஹராப்பான் ஐந்து இடங்களையும், பெரிக்காத்தான் நேஷனல் இரண்டு இடங்களையும் பெற்றன.

அந்த முடிவை அப்படியே அடிப்படையாக வைத்து இம்முறை தேர்தலை மதிப்பிட முடியாத அளவுக்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசியல் சூழல் மாறியுள்ளது.

பாரிசான் நேஷனல், கடந்த தேர்தலில் வென்ற 21 தொகுதிகளையும் தக்கவைத்துக் கொள்ள விரும்புகிறது. இதை அந்தக் கூட்டணி ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளது. அதேவேளை, பெரிக்காத்தான் நேஷனலும் தமக்கான தொகுதிகளை எதிர்பார்க்கிறது. எனவே இரு தரப்பும் தேர்தல் உடன்பாட்டை நோக்கிச் சென்றால், தொகுதிப் பங்கீடு மிகப் பெரிய பேச்சுவார்த்தையாக அமையக்கூடும்.

மலாக்கா பாரிசான் நேஷனல் தலைவர் டத்தோ ஸ்ரீ அப்துல் ரவூஃப் யூசோ, மற்ற அரசியல் கூட்டணிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதன் பின்னரே தேர்தல் உடன்பாடு குறித்த முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். எந்தக் கட்சியுடனும் ஒத்துழைப்பதற்கான வாய்ப்பு தற்போது முழுமையாக மூடப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மறுபுறம், பக்காத்தான் ஹராப்பான் மற்றும் பெர்சாத்து இடையிலான சாத்தியமான தேர்தல் புரிந்துணர்வும் கவனத்தை ஈர்த்துள்ளது. இது போன்ற கூட்டணி ஏற்பாடுகள் உருவானால், பல தொகுதிகளில் வாக்குகள் பல முனைகளாகப் பிரிவதைத் தடுக்கக்கூடும். அதேவேளை, எந்தத் தொகுதியில் யார் போட்டியிடுவது என்பதில் உடன்பாடு காண்பது புதிய சவாலாக அமையலாம்.

கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிடும் சூழல் உருவானால், சில தொகுதிகளில் மூன்று அல்லது நான்கு முனைப் போட்டிகள் உருவாகலாம். அத்தகைய நிலையில் எதிரணிக் கட்சிகளின் வாக்குகள் பிரியும் வாய்ப்பு உருவாகும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஆனால் கூட்டணி அமைப்புகள் மட்டுமே தேர்தலின் அரசியல் கணக்கை நிர்ணயிக்கப் போவதில்லை. வேட்பாளர்களின் நம்பகத்தன்மை, மாநில அரசின் செயல்பாடு, வாழ்க்கைச் செலவு, வாக்காளர்களின் வருகை மற்றும் உள்ளூர் பிரச்சினைகள் ஆகியவையும் குறிப்பாக போட்டி அதிகமுள்ள தொகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

இதனால் மலாக்காவின் 28 தொகுதிகளையும் ஒரே அரசியல் கணக்கில் பார்க்க முடியாது. ஒரு தொகுதியில் கட்சியின் பாரம்பரிய ஆதரவு முக்கியமாக இருக்கலாம். மற்றொரு தொகுதியில் வேட்பாளரின் தனிப்பட்ட செல்வாக்கு முக்கியமாகலாம். இன்னொரு தொகுதியில் கூட்டணி அமைப்பு வாக்குப் பங்கீட்டையே மாற்றக்கூடும்.

இதற்கிடையில், சட்டமன்றம் கலைக்கப்பட்டாலும் மாநில நிர்வாகம் முடங்காது. புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை தற்போதைய நிர்வாகம் காபந்து அரசாங்கமாக தொடர்ந்து செயல்படும். அதேவேளை, பெரிய கொள்கை முடிவுகள் மற்றும் புதிய நிதிப் பொறுப்புகள் போன்றவை புதிய அரசாங்கம் அமைக்கப்படும் வரை கட்டுப்படுத்தப்படும்.

இப்போது கவனம் கூட்டணி பேச்சு வார்த்தைகள், தொகுதிப் பங்கீடு மற்றும் வேட்பாளர் தேர்வு மீது திரும்பியுள்ளது.

2021-ல் 21 தொகுதிகளை வென்ற பாரிசான் நேஷனலுக்கு இந்தத் தேர்தல் தனது நிலையைத் தக்கவைக்கும் சவால். எதிரணிகளுக்கு வாக்குகள் சிதறாமல் தங்களுக்கான அரசியல் கணக்கை உருவாக்கும் சவால்.

அதனால் மலாக்கா தேர்தலின் உண்மையான அரசியல் போட்டி வாக்குப்பதிவு நாளில் மட்டுமல்ல; அதற்கு முன்னதாக நடைபெறவுள்ள கூட்டணி பேச்சு வார்த்தைகள் மற்றும் தொகுதிப் பங்கீட்டிலேயே தொடங்கிவிட்டது.

28 தொகுதிகள் பல அரசியல் கணக்குகள். அந்தக் கணக்குகளின் முடிவில் மலாக்காவின் அடுத்த ஆட்சி யார் கையில் என்பதற்கான பதில் வெளிப்படும்.



ஆலயங்களின் நிலப்பட்டா பிரச்சினைக்கு முடிவு காணும் முயற்சி

பேரா மாநிலத்தில் டத்தோ அ.சிவநேசன் முன்னெடுக்கும் நீண்ட பயணம்



ஓர் ஆலயம் என்பது வெறும் கட்டிடம் அல்ல. ஒரு சமூகத்தின் பல தலைமுறைகளின் நினைவுகளையும், வழிபாட்டு மரபுகளையும், பண்பாட்டு அடையாளத்தையும் தாங்கி நிற்கும் இடம். ஆனால் அந்த ஆலயம் அமைந்துள்ள நிலத்திற்கான சட்டப்பூர்வ உரிமை உறுதி செய்யப்படவில்லை என்றால், எத்தனை ஆண்டுகள் பழமையானதாக இருந்தாலும் அதன் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். பேரா மாநிலத்தில் பல ஆண்டுகளாக நீடித்து வரும் இந்த நிலப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ அ. சிவநேசன் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். தாம் ஆட்சிக்குழு உறுப்பினராக இருக்கும் காலத்திலேயே முடிந்தவரை அதிகமான இந்து ஆலயங்களின் நிலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே அவரது இலக்காக உள்ளது. இதற்காக ஆலய நிர்வாகங்கள், நில அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு துறைகளுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகிறார். இந்தப் பணியின் சிக்கலைப் புரிந்து கொள்ள பேரா மாநிலத்தின் நிலவரத்தையே பார்க்க வேண்டும். சில ஆலயங்கள் பல ஆண்டுகளாக அரசு நிலத்தில் இயங்கி வருகின்றன. சிலவற்றுக்கு நில உரிமை தொடர்பான ஆவணங்கள் இல்லை. சில ஆலயங்களுக்கு மாற்று இடங்கள் வழங்கப்பட்டும் அங்கு இடம்பெயராத நிலையும் உள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு சட்டத்தை மட்டும் முன்னிறுத்தி நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, முதலில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்பதே சிவநேசனின் அணுகுமுறையாகத் தெரிகிறது.

கடந்த பிப்ரவரி மாதம், பேரா மாநிலத்தில் 42 ஆலயங்களுக்கு தேசிய நிலச் சட்டத்தின் கீழ் நிலம் தொடர்பான அறிவிப்புகள் வழங்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார். அவற்றில் ஏற்கெனவே மாற்று இடங்கள் வழங்கப்பட்டும் இடம்பெயராத ஆலயங்களும், வேறு வகையான நிலப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் ஆலயங்களும் இருந்தன.

இந்த விவகாரங்களுக்கு இணக்கமான தீர்வைக் காண மாநில அரசு முயற்சி செய்து வருவதாகவும், நில அலுவலகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் ஒத்துழைப்புடன் ஒரு ஆண்டுக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் சிவநேசன் கூறியிருந்தார். அதே நேரத்தில், சட்டத்தின் எல்லையையும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். தனக்குச் சொந்தமான நிலத்தில் ஆலயம் அமைந்திருந்தால் உரிய உள்ளாட்சி அனுமதிகளைப் பெறலாம். ஆனால் மற்றவர்களின் நிலத்திலோ அல்லது அரசு நிலத்திலோ அனுமதியின்றி ஆலயம் அமைப்பது சட்டரீதியான பிரச்சினையை உருவாக்கும் என்று அவர் விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட பழைய ஆலயங்களை உடனடியாக அகற்றுவது தமது நோக்கம் அல்ல என்றும், இடமாற்றம் சாத்தியமான இடங்களில் மாற்று நிலம் வழங்கி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி வருகிறார். இதற்கான நடைமுறை முயற்சிகளுக்கு ஏற்கெனவே சில பலன்களும் கிடைத்துள்ளன.

கடந்த ஜனவரி மாதம் ஈப்போவில் உள்ள தாமான் தாசெக் மாணிக்கவாசகம் ஆலயம் மற்றும் தாமான் பிந்தாங் ஃபஹ்லும், கம்போங் சிமி ஆலயம் ஆகிய இரண்டு ஆலயங்களின் நீண்டகால நிலப் பிரச்சினைகளுக்கு மாநில நில அலுவலகத்துடனான கலந்துரையாடலுக்குப் பின்னர் தீர்வுக்கான வழி காணப்பட்டது. அதைத் தொடர்ந்து, கடந்த செப்டம்பர் 23 ஆம் தேதி குருவிமலை ஸ்ரீ மகா காளியம்மன் மற்றும் ஏழு கன்னிகை ஆலயத்துக்கும் முக்கியமான முன்னேற்றம் ஏற்பட்டது.

சுமார் 80 ஆண்டுகள் பழமையான அந்த ஆலயத்தின் நிர்வாகம் பல ஆண்டுகளாக நிலம் கோரி வந்தது. முன்னைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில், விவகாரம் சிவநேசனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட நில அதிகாரிகளை ஆலயத்துக்கே அழைத்துச் சென்று நிலைமையை நேரில் பார்வையிடச் செய்வதற்கு சிவநேசன் ஏற்பாடு செய்தார். இதன் தொடர்ச்சியாக ஆலயத்துக்கு 0.8 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

ஆனால், அனைத்து ஆலயங்களுக்கும் ஒரே மாதிரியான தீர்வு சாத்தியமில்லை. குறிப்பாக மாற்று நிலம் வழங்கப்பட்ட ஆலயங்கள் தொடர்பான பிரச்சினை இன்னும் முக்கியமானதாக இருக்கிறது. கடந்த மே மாதம் சிவநேசன் வெளியிட்ட தகவலின்படி, பேரா மாநிலத்தில் 55 ஆலயப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருந்தன.

தீர்க்கப்படாமல் இருந்தன. சில ஆலயங்களுக்கு மாற்று நிலம் வழங்கப்பட்டிருந்தும், அங்கு இடம்பெயர சில ஆலய நிர்வாகங்கள் தயக்கம் காட்டுவதாக அவர் கூறினார்.

இங்கேதான் சிவநேசனின் நிலைப்பாடு மிகவும் வெளிப்படையாகிறது.

மாற்று நிலம் வழங்கப்பட்ட பின்னரும் சம்பந்தப்பட்ட ஆலய நிர்வாகங்கள் அங்கு இடம்பெயராமல் இருந்தால், எதிர்காலத்தில் அரசு சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் நிலையில் அதற்கான பொறுப்பை தாம் ஏற்க முடியாது என்று அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எந்த ஆலயமும் இடிக்கப்படாத வகையில் தீர்வு காண்பதே தமது நோக்கம் என்றும், அதற்கு ஆலய நிர்வாகங்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியம் என்றும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

இந்த அணுகுமுறையின் பின்னணியில் இன்னொரு முக்கியமான எண்ணமும் இருக்கிறது. பேரா மாநிலத்தில் சில ஆலயங்களின் நிலப் பிரச்சினைகள் 40 முதல் 50 ஆண்டுகளாகத் தொடர்வதாக சிவநேசன் கூறியுள்ளார். எனவே, ஒரே நாளில் தீர்வு காண்பதைவிட, ஒவ்வோர் ஆலயத்தின் நிலைமையையும் தனித்தனியாக ஆய்வு செய்து கட்டம் கட்டமாகத் தீர்வு காண வேண்டியிருக்கிறது.

இதற்கிடையில், புதிய பிரச்சினைகள் உருவாகாமல் தடுப்பதற்கும் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 2025 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நில நிர்வாக சுற்றறிக்கையின் அடிப்படையில், அரசு நிலத்தில் புதிய ஆலயங்கள் கட்டுவதற்கான அனுமதிகள் குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாது என்று சிவநேசன் தெரிவித்திருந்தார்.

அதே நேரத்தில், ஏற்கெனவே பல ஆண்டுகளாக இயங்கி வரும் ஆலயங்களை உடனடியாக இடிப்பதைவிட, சாத்தியமான இடங்களில் இடமாற்றம் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு பார்த்தால், சிவநேசனின் ஆலயப் பணியை வெறும் ‘‘நிலப்பட்டா பெற்றுத் தரும் முயற்சி’’ என்று மட்டும் சுருக்கிவிட முடியாது. பழைய ஆலயங்களின் நிலையை ஒழுங்குபடுத்துவது, மாற்று நிலம் தேவைப்படுவோருக்கு வழி காண்பது, நில அலுவலகங்களுடன் இணைந்து செயல்படுவது, ஆலய நிர்வாகங்களின் ஒத்துழைப்பைப் பெறுவது என பல அடுக்குகளில் இந்தப் பணி நடைபெற்று வருகிறது.

ஆலய நிலப் பிரச்சினைகளுடன் இணைந்து, இந்து சமய மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகளையும் மாநில அளவில் முன்னெடுக்கும் பணியில் சிவநேசன் கவனம் செலுத்தி வருகிறார்.

அதற்கு ஒரு முக்கிய உதாரணமாக கடந்த ஜூலை 25 மற்றும் 26 ஆம் தேதிகளில் ஈப்போ கல்லுமலை ஸ்ரீ

சுப்பிரமணியர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான முருகன் மாநாட்டை குறிப்பிடலாம். பேரா மாநில அரசு முழுமையான நிதி ஆதரவுடன் மாநாட்டை இலவசமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிவநேசன் முன்னதாக அறிவித்திருந்தார்.

இதனால், ஒரு பக்கம் ஆலயங்களின் நில உரிமை மற்றும் சட்டப்பூர்வ நிலையை ஒழுங்குபடுத்தும் முயற்சி; மறுபக்கம் இந்து சமயத்தையும் பண்பாட்டையும் முன்னிறுத்தும் மாநில அளவிலான நிகழ்வுகளை நடத்தும் முயற்சி ஶீ இந்த இரு தளங்களிலும் அவரது பொறுப்புகள் தொடர்கின்றன.

ஆனால் நிலப்பட்டா விவகாரமே இன்னும் பெரிய சவாலாக இருக்கிறது. ஓர் ஆலயத்துக்கு நிலப்பட்டா கிடைப்பது என்பது வெறும் ஓர் ஆவணம் கிடைப்பதல்ல. அந்த ஆலயத்தில் பல தலைமுறைகளாக வழிபட்டு வரும் மக்களுக்கு, அந்த வழிபாட்டுத் தலம் எதிர்காலத்திலும் பாதுகாப்பாக இருக்கும் என்ற சட்டப்பூர்வ உறுதியை வழங்குவதாகும்.

அதனால்தான் தாம் ஆட்சிக்குழு உறுப்பினராக இருக்கும் காலத்திலேயே இந்தப் பிரச்சினைகளுக்கு முடிந்தவரை தீர்வு காண வேண்டும் என்ற நோக்கில் சிவநேசன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்.

இது எளிதான பணியல்ல. சில இடங்களில் நிலத்தின் உரிமையைத் தீர்மானிக்க வேண்டும். சில இடங்களில் பழைய ஆவணங்களைத் தேட வேண்டும். சில இடங்களில் மாற்று நிலத்தை ஏற்றுக் கொண்டு இடம்பெயர வேண்டிய நிலை உள்ளது. இன்னும் சில இடங்களில் பல்வேறு அரசு அமைப்புகளின் அனுமதிகள் தேவைப்படுகின்றன.

எனினும், பல ஆண்டுகளாகத் தீர்வு காணப்படாமல் இருந்த பிரச்சினைகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, ஆலய நிர்வாகங்கள் மற்றும் அரசு அதிகாரிகளுடன் நேரடியாகப் பேசி தீர்வை நோக்கி நகர்த்தும் முயற்சி தற்போது நடைபெற்று வருகிறது.

குருவிமலை ஆலயத்துக்கு 0.8 ஏக்கர் நிலம் கிடைத்திருப்பதும், ஈப்போவிலுள்ள இரண்டு ஆலயங்களின் நீண்டகால நிலப் பிரச்சினைகளுக்கு தீர்வுக்கான வழி காணப்பட்டிருப்பதும் அந்தப் பயணத்தின் சில முக்கியமான கட்டங்களாக அமைந்துள்ளன.

ஆனால் இன்னும் பல ஆலயங்கள் தங்களது நில உரிமைக்கான உறுதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அந்தக் காத்திருப்புக்கு முடிவு காண்பதே இப்போது சிவநேசன் முன்னால் இருக்கும் முக்கியப் பணியாக உள்ளது.

ஆலயத்தின் கோபுரம் உயரமாக நிற்பதற்கு முன், அது நிற்கும் நிலத்தின் உரிமையும் உறுதியாக இருக்க வேண்டும். அந்த நில உரிமையை உறுதி செய்யும் முயற்சிதான் பேரா மாநிலத்தில் சிவநேசன் முன்னெடுத்து வரும் இந்தப் பயணத்தின் மையமாக இருக்கிறது.

17 ஆண்டுகாலக் காத்திருப்புக்கு ஒரு முடிவு

சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் புதிய அத்தியாயத்துக்கு அடித்தளம் அமைத்த டத்தோ ஸ்ரீ சுந்தராஜு ஒரு பள்ளியின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டப்படுவது சாதாரண நிகழ்வாகத் தோன்றலாம். ஆனால் பினாங்கு, சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியைப் பொறுத்தவரை, அது வெறும் அடிக்கல் நாட்டு விழா அல்ல. 17 ஆண்டுகளாகத் தொடர்ந்த காத்திருப்புக்கு வைக்கப்பட்ட முற்றுப்புள்ளி.

2009 ஆம் ஆண்டு தொடங்கிய புதிய பள்ளிக் கட்டடத்துக்கான முயற்சி, நிதிப் பற்றாக்குறை, திட்ட அமலாக்கச் சிக்கல்கள், நிலம் தொடர்பான பிரச்சினைகள், ஒப்பந்ததாரர்களின் தாமதங்கள், சட்டரீதியான விவகாரங்கள் என பல்வேறு தடைகளைக் கடந்து வந்தது.

அந்த நீண்ட காத்திருப்புக்குப் பின்னர், கடந்த செப்டம்பர் 6 ஆம் தேதி சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்வி அமைச்சர் டத்தோ ஸ்ரீ ஃபட்லீனா சிடெக் தலைமையில் நடைபெற்ற அந்த விழா, பள்ளி வரலாற்றில் ஒரு முக்கியமான

நாளாகப் பதிவாகியுள்ளது. புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன், கட்டுமானப் பணிக்கான ஒப்புதல் கடிதமும் ஒப்படைக்கப்பட்டது.

ஆனால் இந்த விழாவைப் பார்த்துவிட்டு அங்கிருந்து நகர்ந்துவிட முடியாது.

ஏனெனில், இந்தப் புதிய பள்ளிக் கட்டடத்தின் பின்னால் இருப்பது ஒரு கட்டடத் திட்டம் மட்டுமல்ல; ஒரு தமிழ்ப்பள்ளி எதிர்காலத்தில் எப்படித் திகழ வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையும் ஆகும்.

அந்தப் பார்வையை முன்னெடுப்பவர்களில் முக்கியமானவர் பினாங்கு மாநில வீடமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆட்சிக்குழு உறுப்பினரும், பினாங்கு மாநில 28 தமிழ்ப்பள்ளிகளுக்கான சிறப்புக் குழுத் தலைவருமான டத்தோ ஸ்ரீ சுந்தராஜு சோமு.

ஒரு பள்ளியின் பிரச்சினையைத் தாண்டி...

சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் தற்போதைய கட்டடம் நீண்ட காலமாகப் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்த நிலையில், புதிய பள்ளிக்கான முயற்சி ஒரு கட்டத்தில் நின்றுவிடாமல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

அதன் விளைவாக இன்று ரிம12.6 மில்லியன் மதிப்பிலான புதிய பள்ளிக் கட்டடம் உருவாகிறது.

புதிய வளாகம் தற்போதைய பள்ளியிலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் அமையவுள்ளது. ஆறு வகுப்பறைகள், சிறப்பு அறைகள் மற்றும் மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு துணை வசதிகளைக் கொண்டதாக அது உருவாகும். கட்டுமானப் பணிகள் 56 வாரங்களுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பள்ளிக்கு, புதிய கட்டடம் என்பது வகுப்பறைகள் அதிகரிப்பதைவிடப் பெரிய மாற்றமாக இருக்கப் போகிறது.

அது மாணவர்கள் கற்கும் சூழலையே மாற்றப் போகிறது.

17 ஆண்டுகள் என்பது நீண்ட காலம்.

2009 ஆம் ஆண்டு தொடங்கிய இந்தப் பிரச்சினை இவ்வளவு ஆண்டுகள் நீடித்ததன் பின்னணியில் பல காரணங்கள் இருந்துள்ளன.

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளிலும், சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளிக்கான புதிய கட்டட முயற்சி ஏற்கெனவே பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்தது பதிவாகியுள்ளது. அப்போது நிலம், ஒதுக்கீடு மற்றும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

அதனால், 2026 செப்டம்பர் 6 ஆம் தேதி நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவை ஒரு நாள் நிகழ்வாக மட்டும் பார்க்க முடியாது.

அது 17 ஆண்டுகால முயற்சியின் காட்சிப்படுத்தப்பட்ட தருணம். சுந்தராஜுவின் பங்கு எங்கே வருகிறது?

இங்குதான் டத்தோ ஸ்ரீ சுந்தராஜுவின் பங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

பினாங்கில் 28 தமிழ்ப்பள்ளிகளின் சிறப்புக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் அவர், தமிழ்ப்பள்ளிகளின் பிரச்சினைகளைத் தனித்தனி சம்பவங்களாகப் பார்ப்பதைவிட, அவற்றின் எதிர்காலத் தேவைகளை ஒரே பார்வையில் அணுக வேண்டிய அவசியத்தைத் தொடர்ந்து முன்வைத்து வருகிறார். சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் விவகாரத்திலும் நிலம், கட்டுமானம், நிதி, சட்டரீதியான சிக்கல்கள் என பல தடைகள் இருந்ததாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அந்தத் தடைகளைத் தாண்டி திட்டம் நடைமுறைக்கு வந்திருப்பது, ‘‘பிரச்சினை இருக்கிறது’’ என்று சொல்வதற்கும் ‘‘பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும்’’ இடையிலான வித்தியாசத்தை வெளிப்படுத்துகிறது.

இது சுந்தராஜுவின் பங்கைக் குறிப்பிடும்போது முக்கியமான அம்சமாகிறது.

ஏனெனில், ஒரு தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டடத்தை உருவாக்குவது ஒரு தனிநபரின் முயற்சியால் மட்டும் சாத்தியமாகாது. மத்திய அரசின் நிதி, கல்வி அமைச்சின் முடிவு, மாநில அரசின் ஒருங்கிணைப்பு, கல்வித் துறையின் கண்காணிப்பு, யாயாசான் டிடிக் நெகாராவின் செயல்பாடு என பல தரப்புகளின் பங்களிப்பு தேவைப்படுகிறது.

அந்தப் பல தரப்புகளுக்கிடையே தமிழ்ப்பள்ளியின் தேவையை தொடர்ந்து முன்னிறுத்தும் அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர் சுந்தராஜு.

இது சுங்கை பாக்காப் மட்டும் அல்ல.

சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டடம் உருவாகிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில், பினாங்கில் இந்த ஆண்டு மூன்று தமிழ்ப்பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்களை அமைக்க மாநில அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாக சுந்தராஜு தெரிவித்துள்ளார்.

அவற்றில் ஜுரு தோட்டத் தமிழ்ப்பள்ளியும் இடம் பெற்றுள்ளது. அதன் கட்டுமானப் பணிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் கதை, ஒரு பள்ளியின் 17 ஆண்டுகாலக் காத்திருப்பை முடிப்பதோடு நின்றுவிடவில்லை.

பினாங்கில் தமிழ்ப்பள்ளிகளின் உள்கட்டமைப்பை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுச் செல்லும் முயற்சியின் ஒரு பகுதியாகவும் அது மாறுகிறது. நாளை குழந்தைகள் நடக்கப் போகும் பாதை இன்று அந்த இடத்தில் அடிக்கல் மட்டுமே இருக்கலாம். நாளை அங்கு கட்டடம் எழும்.

அதன் வகுப்பறைகளில் குழந்தைகள் அமர்வார்கள். ஆசிரியர்கள் பாடம் நடத்துவார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிக்கு அழைத்து வருவார்கள். அப்போது, இந்தக் கட்டடத்தின் பின்னால் இருந்த 17 ஆண்டுகாலக் காத்திருப்பு பலருடைய நினைவிலிருந்து மறைந்து போகலாம்.

ஆனால் அந்தக் கட்டடம் ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொண்டே இருக்கும்: தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலத்தைப் பற்றி பேசுவது மட்டும் போதாது; அந்த எதிர்காலத்துக்கான அடித்தளத்தையும் அமைக்க வேண்டும்.

சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல், அந்தப் பயணத்தின் ஒரு முக்கியமான அடையாளம். அந்த அடிக்கல் நாட்டப்பட்ட 2026 செப்டம்பர் 6 ஆம் தேதி, சுங்கை பாக்காப் தமிழ்ப்பள்ளியின் வரலாற்றில் ஒரு புதிய பக்கத்தைத் திறந்த நாள். அந்தப் புதிய பக்கத்தில், பள்ளி சமூகத்தின் 17 ஆண்டுகாலக் காத்திருப்பும் இருக்கிறது. அரசாங்கத்தின் ரிம12.6 மில்லியன் முதலீடும் இருக்கிறது. மேலும், பினாங்கின் 28 தமிழ்ப்பள்ளிகளின் தேவைகளை முன்னிறுத்தி செயல்பட்டு வரும் டத்தோ ஸ்ரீ சுந்தராஜு சோமுவின் முயற்சிக்கும் ஒரு முக்கிய இடம் இருக்கிறது.

வேலை தேடுபவர்களைத் தேடி வரும் வேலை வாய்ப்பு

சிலாங்கூரில் புதிய பாதையைத் திறக்கும் பாபாராய்டுவின் "Job Care' முயற்சி

வேலை இல்லை என்று கவலைப்படுபவர்கள் ஒருபுறம். வேலை இருக்கிறது ஆனால் சரியான வேலை எங்கே இருக்கிறது என்பது தெரியாமல் இருப்பவர்கள் மறுபுறம். வேலை வழங்கத் தயாராக இருக்கும் நிறுவனங்கள் ஒரு புறம்.

இந்த மூன்றையும் ஒரே இடத்தில் சந்திக்கச் செய்வதுதான் வேலை வாய்ப்பு கண்காட்சிகளின் நோக்கம். ஆனால் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. பாபாராய்டு வீரமான், இந்த முயற்சியை அதற்கும் அப்பால் கொண்டு செல்ல விரும்புகிறார்.

அவருடைய கேள்வி எளிமையானது. வேலை தேடுபவர்கள் ஏன் வேலை இருக்கும் இடத்திற்குச் செல்ல வேண்டும்? வேலை வாய்ப்புகளையே அவர்களிடம் கொண்டு செல்ல முடியாதா? இந்த எண்ணத்தில்தான் சிலாங்கூரின் Job Care பயணம் உருவாகிறது.

மாநிலத்தின் ஒன்பது மாவட்டங்களுக்கும் சென்று, அங்குள்ள மக்களுக்கே அவர்களின் பகுதியில் கிடைக்கும் வேலை வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவது இந்த முயற்சியின் அடிப்படை நோக்கம்.

சபாக் பெர்ணாமிலிருந்து அம்பாங் வரை, மாவட்டம் மாவட்டமாகச் சென்று வேலை வாய்ப்புகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் இந்த அணுகுமுறையை பாபாராய்டு முன்னெடுத்து வருகிறார்.

ஒரு வேலை வாய்ப்புக் கண்காட்சியைத் தாண்டி...

பாபாராய்டுவின் பார்வையில் Job Care என்பது நிறுவனங்கள் கூடும் ஒரு கண்காட்சி மட்டும் அல்ல. அது வேலை தேடுபவருக்கும் வேலை வழங்குபவருக்கும் இடையிலான நேரடி பாலம். குறிப்பாக, ஒருவர் தனது மாவட்டத்திலேயே வேலை பெற முடிந்தால், நீண்ட தூரப் பயணம், போக்குவரத்து நெரிசல், சுங்கக் கட்டணம், வாகன நிறுத்தச் செலவு போன்ற பல சிரமங்களைக் குறைக்க முடியும்.

இதனால்தான் வேலை வாய்ப்புகளை மையப் பகுதிகளில் மட்டும் குவிக்காமல், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார். இந்த முயற்சியின் அளவு இப்போது புள்ளிவிவரங்களிலும் தெரிகிறது.

Mega Job Care Selangor 2026 நிகழ்வில் மட்டும் 147 நிறுவனங்கள் இணைந்து, 11,000-க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை வழங்கியுள்ளன. 20,000-க்கும் மேற்பட்டோர் கண்காட்சிக்கு வந்துள்ளனர். அவர்களில் 2,328 பேர் வேலை பெற்றுள்ளனர். மேலும் 2,435 பேர் இரண்டாம் கட்ட நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர். இவை வெறும் கண்காட்சி எண்ணிக்கைகள் அல்ல. ஒவ்வொரு எண்ணுக்கும் பின்னால் ஒரு குடும்பம் இருக்கிறது.

ஒருவருக்கு கிடைக்கும் வேலை, ஒரு குடும்பத்தின் மாத வருமானத்தை மாற்றக்கூடும். ஒரு இளைஞனுக்குக் கிடைக்கும் முதல் வேலை, அவரது வாழ்க்கையின் அடுத்த பத்து ஆண்டுகளுக்கான பாதையை மாற்றக்கூடும்.

அதனால்தான் வேலை வாய்ப்பின் தரம் குறித்தும் பாபாராய்டு கவனம் செலுத்துகிறார். இந்த Mega Job Care நிகழ்வில் வழங்கப்பட்ட 11,000-க்கும் மேற்பட்ட பணிகளில் 62.2 விழுக்காடு பணிகளுக்கு ரிம3,000-க்கும் அதிகமான ஊதியம் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும், அந்த வேலை வாய்ப்புகளில் 98.4 விழுக்காடு சிலாங்கூரிலேயே அமைந்துள்ளன.

இந்தப் புள்ளிவிவரங்கள் குறிப்பாக சிலாங்கூர் இந்திய சமூகத்துக்கும் முக்கியமான செய்தியைச் சொல்கின்றன. வேலை தேடும் இளைஞர்கள் மட்டுமல்லாமல், ஏற்கெனவே வேலை செய்து கொண்டிருப்பவர்களும் Job Care போன்ற நிகழ்வுகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சிறந்த ஊதியம், புதிய துறை, பதவி உயர்வு, திறன் வளர்ப்பு அல்லது வேறு ஒரு தொழில் வாய்ப்பு - இவற்றை அறிந்து கொள்ள வேலை வாய்ப்புக் கண்காட்சிகள் ஒரு நேரடி வாய்ப்பாக அமைகின்றன.

பாபாராய்டு சட்டமன்றத்தில் முன்பு விளக்கியபடி, Job Care நிகழ்வுகளில் வேலை வாய்ப்புகள் மட்டுமல்லாமல், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களும் பங்கேற்று, திறன் மேம்பாடு மற்றும் மறுதிறன் பயிற்சிகளுக்கான வாய்ப்புகளை அறிமுகப்படுத்துகின்றன.

இதன் பொருள், "வேலை வேண்டும்" என்று செல்வது மட்டுமல்ல; "எந்தத் துறையில் எனது எதிர்காலத்தை உருவாக்கலாம்?" என்று தேடிச் செல்லவும் Job Carn உதவுகிறது.

பட்டதாரிகளுக்கும் அனுபவசாலிகளுக்கும்...

வேலை வாய்ப்பு என்றால் இளைஞர்களுக்கான வாய்ப்பு மட்டுமே என்ற எண்ணத்தையும் இந்த முயற்சி மாற்றுகிறது.

பாபாராய்டு குறிப்பிட்டுள்ளபடி, 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் Job Care-ல் வேலை வாய்ப்புகள்

இருக்கின்றன. குறிப்பாக நிர்வாகம், நிர்வாகப் பொறுப்புகள், அனுபவம் தேவைப்படும் பணிகளில் வயதும் அனுபவமும் சில நிறுவனங்களுக்கு சாதகமாக இருக்கக்கூடும்.

அதேபோல், ஏற்கெனவே வேலை செய்து கொண்டிருப்பவர்களும் சிறந்த வாய்ப்பைத் தேடி Job Care-க்கு வரலாம்.

அதனால், இது வேலையில்லாதவர்களுக்கான நிகழ்ச்சி என்று மட்டும் பார்க்க முடியாது.

தங்களுடைய அடுத்த வேலை வாய்ப்பைத் தேடுபவர்களுக்கான தளமாகவும் இது உருவெடுக்கிறது.

ஒரு வேலை ஒரு குடும்பத்தின் மாற்றம்

சிலாங்கூரின் பொருளாதாரம் தொடர்ந்து வளர்ந்து வரும் நிலையில், தொழில்துறைக்கு தேவையான மனிதவளத்தையும் அதே வேகத்தில் உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. அதற்கான ஒரு பாலமாக Job Care செயல்படுகிறது.

ஒருபுறம் வேலை வழங்குநர்கள் தங்களுக்குத் தேவையான மனிதவளத்தைத் தேடுகிறார்கள். மறுபுறம் வேலை தேடுபவர்கள் தங்களுடைய திறமைக்கேற்ற வாய்ப்பைத் தேடுகிறார்கள். இந்த இருவரையும் நேருக்கு நேர் சந்திக்கச்

செய்வதுதான் பாபாராய்டுவின் முயற்சியின் முக்கியத்துவம்.

2026 ஆம் ஆண்டு தொடக்கம் முதல் சிலாங்கூரில் வேலை இழந்தவர்கள் எண்ணிக்கை சுமார் 11,000 என மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் பாபாராய்டு தெரிவித்திருந்தார். குறிப்பாக உற்பத்தி, உணவு மற்றும் பானத் துறை, சுற்றுலாத் துறைகளில் வேலை இழப்புகள் பதிவாகியதாக அவர் கூறியிருந்தார். அதே நேரத்தில் Job Care மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

இதன் பின்னணியில் Job Care-ன் முக்கியத்துவம் இன்னும் தெளிவாகிறது.

வாய்ப்பு கதவைத் தட்டும்போது.....

ஒரு காலத்தில் வேலை தேடுபவர் நாளிதழில் விளம்பரத்தைப் பார்த்து விண்ணப்பிக்க வேண்டும். பின்னர் இணையதளங்களில் வேலை தேடத் தொடங்கினார். இப்போது வேலை வாய்ப்பே அவருடைய சமூகத்துக்கு வந்து சேரும் ஒரு கட்டத்தை நோக்கி துடிக ஊயசந நகர்கிறது. ஆனால் வாய்ப்பு கதவுக்கு வந்து நிற்பது மட்டும் போதாது.

அந்தக் கதவைத் திறக்க வேண்டும்

குறிப்பாக சிலாங்கூர் இந்திய இளைஞர்கள், தொழிலாளர்கள், பட்டதாரிகள், வேலை மாற்றத்தை எதிர்பார்ப்பவர்கள், புதிய திறன்களைப் பெற விரும்புபவர்கள் எனப் பல தரப்பினரும் இந்த வாய்ப்புகளைத் தீவிரமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஏனெனில், 11,000 வேலை வாய்ப்புகள் இருப்பது ஒரு புள்ளிவிவரம். அதில் ஒரு வேலை உங்கள் வாழ்க்கையை மாற்றக்கூடிய வாய்ப்பு என்பதுதான் உண்மையான செய்தி. அந்த வாய்ப்பை மக்களின் வீட்டு வாசலுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில், மாவட்டம் மாவட்டமாகப் பயணிக்கிறார் பாபாராய்டு.

வேலை தேடுபவர்களைத் தேடி வேலை வாய்ப்பை அழைத்துச் செல்லும் இந்தப் பயணம், சிலாங்கூரில் ஒரு புதிய வேலை வாய்ப்பு கலாசாரத்துக்கு அடித்தளமாகுமா?

அதற்கான விடையை வரும் ஆண்டுகளில் புள்ளிவிவரங்கள் சொல்லும். ஆனால் ஒரு விஷயம் இப்போதே தெளிவாகத் தெரிகிறது.

வேலை வாய்ப்பை உருவாக்குவது மட்டும் போதாது;

அந்த வாய்ப்பு தேவைப்படுபவரைச் சென்றடையச் செய்வதும் அரசின் பொறுப்பு.

அந்தப் பாதையில் Job Care மூலம் பாபாராய்டு முன்னெடுக்கும் முயற்சி, கவனிக்கப்பட வேண்டிய ஒரு புதிய அணுகுமுறையாக உருவெடுத்துள்ளது.





விஞ்ஞான வரலாற்றில் ஒரு மைல்கல்லாக, இந்தியப் பெருங்கடலின் அதல பாதாளத்தில் இதுவரை உலகிலேயே கண்டறியப்படாத மிகப் பெரிய மற்றும் பழமையான "திமிங்கல இடுகாடு" (Whale Graveyard / Necropolis) ஒன்றை சீன விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். முற்றிலும் விசித்திரமான ஆழ்கடல் உயிரினங்கள் வாழும் புகலிடமாக விளங்கும் இந்த இடம், அறிவியல் உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. சீன அறிவியல் அகாடமியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தங்களின் அதிநவீன 'ஃபென்டோசு' என்ற ஆழ்கடல் நீர்மூழ்கிக் கப்பல் மூலம் இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதியில் சுமார் 32 முறை ஆய்வுகளை மேற்கொண்டனர்.

இந்தியப் பெருங்கடலில் பிரம்மாண்ட

'திமிங்கல இடுகாடு'

ஆழ்கடலில் புதிய உலகைக் கண்டறிந்த விஞ்ஞானிகள்

அப்போது, மேற்கு ஆஸ்திரேலியாவுக்கு அப்பால் உள்ள 'டயமண்டினா ஃபிராக்சர் சோன்' என்ற பகுதியில், கடற்பரப்பிற்கு கீழே சுமார் 7,000 மீட்டர் (7 கிலோமீட்டர்) ஆழத்தில் இந்த பிரம்மாண்ட இடுகாடு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இந்த அரிய கண்டுபிடிப்பு குறித்த விரிவான ஆய்வு முடிவுகள் உலகப் புகழ்பெற்ற அறிவியல் இதழான 'நேச்சர்' இதழில் சமீபத்தில் வெளியாகியுள்ளன.

சுமார் 1,200 கிலோமீட்டர் நீளமுள்ள ஒரு குறுகிய கடல் பகுதியில், ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட திமிங்கலங்களின் எலும்புக் கூடுகள் ஒரே இடத்தில் குவிந்து கிடக்கின்றன. இதனாலேயே விஞ்ஞானிகள் இந்த இடத்தை 'நெக்ரோபோலிஸ்' (இறந்தோரின் நகரம்) என்று அழைக்கின்றனர். இங்கு கண்டறியப்பட்டுள்ள புதைபடிவங்கள் சுமார் 5.3 மில்லியன் ஆண்டுகள் பழமையானவை என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இந்த இடுகாட்டின் ஆழமான பகுதிகளில் சுமார் 10 மில்லியனுக்கும் அதிகமான திமிங்கல உடலங்கள் புதைந்திருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கணிக்கின்றனர்.



ஆழ்கடலின் கடுமையான அழுத்தத்திற்கு மத்தியிலும், நீர்மூழ்கிக் கப்பலின் ரோபோடிக் கரங்களைப் பயன்படுத்தி சில முக்கிய திமிங்கல எலும்புக் கூடுகளின் மாதிரிகள் வெற்றிகரமாக

மீட்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வின் போது, முற்றிலும் புதிய ஒரு வகையான 'மூக்குத் திமிங்கலம்' இனத்தின் புதைபடிவங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இது பூமியில் திமிங்கலங்களின் பரிணாம வளர்ச்சியை ஆராய புதிய கதவுகளைத் திறந்து விட்டுள்ளது.

கடலின் மேல்மட்டத்தில் திமிங்கலங்கள் இறந்து, அவற்றின் உடல்கள் கடலின் அடிவாரத்தில் விழுவதை அறிவியல் பூர்வமாக "வேல் ஃபால்ஸ்' என்று அழைக்கின்றனர். சூரிய வெளிச்சமே புக முடியாத, கடும் குளிர் நிறைந்த இந்த ஆழ்கடலில், இந்த திமிங்கல உடலங்கள்தான் அங்கு வாழும் விசித்திரமான உயிரினங்களின் அமுதசுரபியாக மாறுகின்றன. திமிங்கலங்களின் இறந்த உடல்களில் உள்ள மென்மையான திசுக்கள் மற்றும் கொழுப்புகள் (கிட்டத்தட்ட 6.7 மில்லியன் டன் கார்பன் அளவு), அங்கு வாழும் ஜெல்லி மீன்கள், ஆழ்கடல் புழுக்கள், விசித்திரமான நத்தைகள், நண்டுகள் மற்றும் கடல் நாரத்தைகள் போன்ற நூற்றுக்கணக்கான உயிரினங்களுக்குப் பல தசாப்தங்களாகத் தேவையான உணவு ஆதாரத்தை வழங்கி, அங்கு ஒரு புதிய சூழலியல் அமைப்பையே (Ecosystem) உருவாக்கியுள்ளன.

புதைபடிவ ஆய்வாளர் ஸ்டீபன் காட்ஃப்ரே இந்தக் கண்டுபிடிப்பை, 1977-ல் முதன் முதலில் கடலடி எரிமலைத் துவாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றுச் சாதனையோடு ஒப்பிட்டுப் பாராட்டியுள்ளார். மேலும் இது ஒரு மிகப் பெரிய "பிளாக்பஸ்டர்" திரைப்படத்தின் ஆரம்பக் காட்சி போன்ற பிரம்மாண்டத்தைக் கொண்டுள்ளது என்றும், எதிர்காலத்தில் உலகெங்கிலும் உள்ள ஆழ்கடல்களில் இது போன்ற பல இடுகாடுகளைக் கண்டறிய நீர்மூழ்கிப் பயணங்கள் தொடர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வீடு சிறையாகுமா?

நஜீப்பின் வீட்டுக்காவல் எப்படி இருக்கும்?

முன்னாள் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜீப் ரஸாக் சிறையிலிருந்து வீட்டுக்குச் செல்லும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர் செல்லப் போகும் வீடு உண்மையில் எப்படிப்பட்ட சிறையாக இருக்கும்? இதுதான் இப்போது மலேசியர்களிடையே எழுந்துள்ள முக்கியக் கேள்வி.

செப்டம்பர் 18-ஆம் தேதி மன்னிப்பு வாரியத்தின் முடிவைத் தொடர்ந்து, நஜீப் தமது எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல் வழக்கில் எஞ்சிய சிறைத்தண்டனையை 2028 ஆகஸ்ட் 23-ஆம் தேதி வரை வீட்டுக்காவலில் அனுபவிக்க நிபந்தனையுடன் அனுமதி பெற்றுள்ளார். இதற்கான முக்கிய நிபந்தனையாக ரிங்கிட் 50 மில்லியன் அபராதம் செலுத்த வேண்டும். நிபந்தனைகள் மீறப்பட்டால் மீண்டும் சிறைத்தண்டனை தொடரும். ஆனால் நஜீப் இன்னும் காஜாங் சிறையில்தான் இருக்கிறார்.

செப்டம்பர் 21-ஆம் தேதி வரை ரிங்கிட் 50 மில்லியன் அபராதம் செலுத்தப்படவில்லை என்று சட்டத்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். அபராதம் செலுத்தப்பட்ட பின்னரும் வீட்டுக்காவலுக்கு மாற்றுவதற்கு சில நடைமுறைகள் தேவைப்படும் என்றும், அதற்கான செயல்பாட்டு நடைமுறைகளை சிறைத்துறை வெளியிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கிடையில், காவல்துறையும் சிறைத்துறையும் நஜீப்பின் ஜாலான் லங்காக் டூத்தா இல்லத்தில் பாதுகாப்பு அம்சங்களை மதிப்பீடு செய்துள்ளன.

ஆனால் அந்த வீடுதான் இறுதியாக வீட்டுக்காவல் நடைபெறும் இடம் என்று இன்னும் உறுதி செய்யப்படவில்லை. அதிகாரப்பூர்வ உத்தரவு கிடைத்த பின்னரே இடமும் அதனுடன் தொடர்புடைய நிபந்தனைகளும் இறுதி செய்யப்படும் என்று காவல்துறை தெரிவித்துள்ளது.

வீட்டுக்காவல் என்றால் என்ன?

வீட்டுக்காவல் என்பது சிறையிலிருந்து வெளியே வந்து முழுச் சுதந்திரத்துடன் வீட்டில் வாழ்வது அல்ல.

ஒருவர் வசிக்கும் இடத்திலேயே இருந்து தண்டனையைத் தொடரும் வகையில், அவரது நடமாட்டம் மற்றும் செயல்பாடுகள் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படலாம். கண்காணிப்பு, வெளியே செல்வதற்கான கட்டுப்பாடுகள், அதிகாரிகளின் கண்காணிப்பு போன்ற நடைமுறைகள் நாட்டுக்கு நாடு மாறுபடும்.

ஆனால் நஜீப்புக்கு எந்தெந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்பது குறித்து தற்போது ஊகிப்பது சரியாகாது. ஏனெனில் அதற்கான

அதிகாரப்பூர்வ நடைமுறைகள் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை.

மலேசியாவுக்கு இது முதல் அனுபவம். இதுதான் இந்த விவகாரத்தை மேலும் முக்கியமானதாக்குகிறது.

மலேசியாவில் தற்போது வீட்டுக்காவலை நிர்வகிக்கும் தனிச்சட்டம் இல்லை. அரசாங்கம் சிறை நெரிசலைக் குறைப்பதற்காக House Arrest சட்ட மசோதா ஒன்றை உருவாக்குவதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் பெற்றுள்ளது.

ஆனால் அந்தச் சட்ட முன்மொழிவு முக்கியமாக விசாரணை முடியாத நிலையில் உள்ள தகுதியான சந்தேகநபர்களை கைதிகளை வீட்டிலிருந்து கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டது. அது நஜீப்பின் தற்போதைய வீட்டுக்காவல் ஏற்பாட்டுடன் தொடர்புடையதல்ல என்று உள்துறை அமைச்சர் டத்தோ ஸ்ரீ சைஃபுடின் நசுத்தியோன் இஸ்மாயில் தெளிவுபடுத்தியுள்ளார்.

அப்படியானால் நஜீப்பின் வீடு எப்படி சிறையாக மாறப் போகிறது?

அவரை யார் கண்காணிப்பார்கள்?

அவர் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியுமா?

யாரைச் சந்திக்க முடியும்?

விதிமுறைகளை மீறினால் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைத்தான் இப்போது நாடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

நஜீப்பின் வீட்டுக்காவல் ஒரு முன்னாள் பிரதமரின் தண்டனை முறையில் ஏற்பட்ட மாற்றம் மட்டுமல்ல.

மலேசியாவில் சிறைத்தண்டனையின் புதிய வடிவம் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படப் போகிறது என்பதற்கான முதல் பெரிய சோதனையும் இதுதான்.

அதனால், மக்கள் எதிர்பார்ப்பது நஜீப் எப்போது வீட்டுக்குச் செல்கிறார் என்பதைக் காட்டிலும் – வீட்டுக்குச் சென்ற பிறகு அந்த வீடு உண்மையில் எவ்வளவு சுதந்திரமானது எவ்வளவு சிறையானது என்பதைத்தான்.

நெற்களஞ்சியத்தின் நடுவில் ஒரு விவசாயியின் காவியம்

மலேசியாவின் நெற்களஞ்சியமான கெடா மாநிலத்தின் பச்சைப் பசேல் என்ற வயல்வெளிகளுக்கு நடுவே அமைந்திருந்தது பாக் வஹாப்பின் அந்தப் பலகை வீடு. மேல்மாடியைக் கொண்ட அந்த பாரம்பரிய வீடு, உழைப்பின் அடையாளமாக கம்பீரமாக நின்றது. அது வெறும் வீடல்ல; ஒரு விவசாயியின் வியர்வையாலும், நேர்மையாலும் கட்டப்பட்ட உன்னதக் கோட்டை.

பாக் வஹாப்பின் நாள் விடியற்காலையிலேயே தொடங்கிவிடும். இயற்கையின் அமைதியில், அதிகாலைப் பஜர் தொழுகையை முடித்து விட்டு அவர் தனது அன்றாடப் பணிகளைத் தொடங்குவார். தொழுகை தந்த மன அமைதியோடு வீட்டின் அருகே இருக்கும் கோழிக்கூட்டைத் திறந்து விட்டு, கோழிகளுக்குத் தீவனம் போடுவது அவரின் முதல் வேலை. காக்பார்க் சத்தமும், கோழிகளின் சலசலப்பும் அந்தப் பொழுதின் அழகிய பின்னணி இசை. அதன் பின், எளிய காலை சிற்றுண்டியை முடித்து விட்டு, அவர் தன் உயிர்நாடியான வயல்வெளியை நோக்கிப் புறப்படுவார்.

சூரியன் மெல்ல மேலேற, பாக் வஹாப் சேற்றில் இறங்கி உழைக்கத் தொடங்குவார்.



நெற்கதிர்களைத் தன் பிள்ளைகளாகக் கருதி அவர் செய்த உழைப்பு உன்னதமானது. மதிய வெயில் உச்சிக்கு வரும் போது, பசியோடும் களைப்போடும் வீட்டிற்குத் திரும்புவார். வீட்டில் சமைத்த சுடச்சுட மதிய உணவைச் சாப்பிட்டு விட்டு, பலகை வீட்டின் திண்ணையிலோ அல்லது மர நிழலிலோ சிறிது நேரம் ஓய்வெடுப்பார். அந்தச் சிறு தூக்கம் அவருக்கு அடுத்த கட்ட உழைப்பிற்கான ஆற்றலைத் தரும். மாலை வரை வயலில் வேலை செய்து விட்டு, அந்தி சாயும் நேரத்தில் வீடு திரும்புவார்.

விவசாயம் தாண்டி, மீன் பிடித்தல் பாக் வஹாப்பின் மனதிற்குப் பிடித்த ஒரு பொழுதுபோக்கு. மாலை நேரங்களில் ஏரி, குளங்களில் மீன் பிடிக்கச் செல்வார். ஆனால், பருவமழைக் காலம் வந்து விட்டால் அவரது வாழ்க்கை முறை மாறும். மழைக் காலங்களில் அவர் வெளியில் செல்லாமல், வீட்டிற்குள்ளேயே அமர்ந்து மீன்பிடி வலைகளைத் திறம்படப் பின்னுவார். சேதமடைந்த வலைகளைப் பழுது பார்ப்பார். இயற்கை சீறும் போது அதற்கு மதிப்பளித்து, வீட்டிற்குள் பயனுள்ள வேலைகளைச் செய்யும் அவரது பக்குவம் போற்றத்தக்கது.

அன்றைய நாளில் மின்சார வசதி கிடையாது. இரவு நேரங்களில் அந்தப் பலகை வீட்டை ஒளிரச் செய்வது 'கேஸ்லைட்' (Gaslight) எனப்படும் எரிவாயு விளக்குதான். அந்த விளக்கு தரும் மங்கலான, ஆனால் இதமான வெளிச்சத்தில் பாக் வஹாப் தன் பிள்ளைகளைச் சுற்றிலும் அமர வைப்பார். பகலெல்லாம் வயலில் உழைத்து உடம்பு வலித்தாலும், இரவில் பிள்ளைகளின் கல்வியில் தனிக் கவனம் செலுத்துவார். அவர்களுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுத்து, ஒழுக்கத்தைக் கற்றுத் தருவார்.

பாக் வஹாப்பின் வாழ்க்கை, ஒரு விவசாயியின் உன்னத சுயசரிதைக்கு மிகச் சிறந்த உதாரணம். எளிமை, கடின உழைப்பு, குடும்பத்தின் மீதான அக்கறை, இயற்கையோடு இயைந்த வாழ்வு என ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதை அவரது அன்றாட வாழ்வு நமக்குக் கற்றுத் தருகிறது. நெற்களஞ்சியத்தின் பச்சை பசேலென்ற பின்னணியில் உழைத்த அந்த கைகளும், கேஸ்லைட் வெளிச்சத்தில் தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை வடித்த அந்த அன்பும் என்றும் அழியாத காலச்சுவடுகள். இயற்கையை மதித்து, உழைப்பை நம்பி வாழ்ந்த பாக் வஹாப் போன்ற மனிதர்கள், நம் மண்ணின் உண்மையான பெருமைமிகு அடையாளங்கள்.

நெருப்பு வளையத்தில் மலேசியா: எல் நினோ எச்சரிக்கை

புவி வெப்பமயமாதல் மற்றும் தீவிரமடைந்து வரும் பருவநிலை மாற்றத்தின் பின்னணியில், மலேசியா தற்போது ஒரு புதிய சுற்றுச்சூழல் நெருக்கடியின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது. மலேசிய வானிலை ஆய்வு மையமான மெட் மலேசியா விடுத்துள்ள அண்மைய கால எச்சரிக்கையின்படி, 2026 முதல் 2027 ஆம் ஆண்டின் முற்பகுதி வரை நீடிக்கக்கூடிய மிகக் கடுமையான 'எல் நினோ' (El Niño) எனப்படும் வறண்ட காலநிலை சுழற்சி மலேசியாவைத் தாக்கத் தொடங்கியுள்ளது.

உலகளாவிய காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால், கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகள் வரலாற்றின் மிக வெப்பமான ஆண்டுகளாகப் பதிவாகக்கூடும் என்று காலநிலை நிபுணர்கள் கணித்துள்ளனர். தென்மேற்குப் பருவமழைக் காலத்தோடு இணைந்து வரும் இந்த எல் நினோ நிகழ்வு, நாட்டின் சுற்றுச்சூழல் மற்றும் நீர் மேலாண்மைத் துறைகளுக்குப் பெரும் அறிவியல் சவால்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வறண்ட காலநிலையால் மலேசியா எதிர்கொள்ளும் மிக முதன்மையான சவால், தீவிரமடையும் நீர் பற்றாக்குறையாகும். நாட்டின் சில மாநிலங்களில் சராசரி மழைப் பொழிவு 40% முதல் 60% வரை குறையக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால், நீர்நிலைகள் மற்றும் அணைகளின் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து, பொதுமக்களுக்கான குடிநீர் விநியோகமும், தொழிற்சாலைகளுக்கான நீர் தேவையும் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதே வேளையில், நீர் இருப்பு குறைவதால் ஆறுகளில் நீரின் தரம் மற்றும் வேகம் குறைந்து, இரசாயனக் கழிவுகளின் செறிவு அதிகரிக்கும். இது நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டை முடக்குவதுடன், குடிநீர் விநியோகக் கட்டமைப்பை உடைவின் விளிம்பிற்குத் தள்ளக்கூடும் என மலேசிய நீர் மற்றும் எரிசக்தி ஆராய்ச்சி சங்கம் (AWER) எச்சரித்துள்ளது.

சுற்றுச்சூழல் ரீதியாகப் பார்க்கும் போது, நீடித்த வறட்சி மற்றும் கடுமையான வெப்ப அலைகள் (Heatwaves) நாட்டின் காடுகள் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்திற்குப் பெரும் அச்சுறுத்தலாய் மாறியுள்ளன. குறிப்பாக சரவாக், சபா மற்றும் தீபகற்ப மலேசியாவின் பல மாநிலங்களில் உள்ள 'கரிநிலங்கள்' மிக எளிதாகத் தீப்பற்றக்கூடிய அபாயகரமான நிலையில் உள்ளன.

இத்தகைய நிலங்களில் ஏற்படும் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவது அறிவியல் பூர்வமாக மிகவும் சவாலானது. இது நாட்டின் உள்நாட்டுச் சூழலைச் சீர்குலைப்பது மட்டுமன்றி, எல்லை தாண்டிய கடுமையான புகைமூட்டத்தையும் உருவாக்கி,

பொதுமக்களின் சுவாச ஆரோக்கியத்திற்குப் பெரும் தீங்கினை விளைவிக்கும். மேலும், இந்த அதீத வெப்பம் மலேசியாவின் முக்கிய வாழ்வாதாரமான நெல் சாகுபடி மற்றும் எண்ணெய் பனை உற்பத்தியையும் 18% வரை வீழ்ச்சியடையச் செய்து உணவுப் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கும்.

இத்தகைய சவால்களை எதிர்கொள்ள மலேசியா வெறும் பாரம்பரிய உத்திகளை மட்டும் நம்பியிருக்காமல், மேம்பட்ட அறிவியல் தொழில்நுட்பத் தீர்வுகளை நோக்கி நகர வேண்டியது கட்டாயமாகும். மெட் மலேசியா தற்போது செயற்கைக்கோள் தரவுகள் மற்றும் நவீன முன்கணிப்பு

மாதிரிகள் (Climate Forecasting Models) மூலம் 7 நாட்களுக்கு முந்தைய காட்டுத் தீ மற்றும் புகைமூட்ட எச்சரிக்கை அமைப்புகளை முடுக்கிவிட்டுள்ளது. அணை மேலாண்மை, நதிக்கு வெளியேயான நீர்ச் சேமிப்புக் கிடங்குகள் மற்றும் மேக விதைப்பு போன்ற செயற்கை மழைப் பொழிவு உத்திகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இந்த 2026-2027 எல் நினோ என்பது வெறும் தற்காலிகக் காலநிலை நிகழ்வல்ல; இது மனித குலத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு நீண்டகாலப் பருவநிலை எச்சரிக்கையாகும். அரசாங்கத்தின் அறிவியல் பூர்வமான தடுப்பு நடவடிக்கைகளோடு, பொதுமக்களும் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் திறந்தவெளி எரிப்புகளைத் தவிர்த்தல் போன்ற கூட்டுப் பொறுப்பினை உணர்ந்து செயல்பட்டால் மட்டுமே, மலேசியா இந்த இயற்கைச் சவாலை வெற்றிகரமாகக் கடக்க முடியும்.

வரலாற்றின் சாட்சி:
செழுமை நிறைந்த
கிம்மாஸ் நகர்

கிம்மாஸ் என்பது மலேசியாவின் நெகிரி செம்பிலான் மாநிலத்தில், ஜோகூர் மாநிலத்தின் எல்லையை ஒட்டி அமைந்துள்ள ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதியான நகரமாகும். ஒரு காலத்தில் மலாயா தீபகற்பத்தின் மிக முக்கிய போக்குவரத்து மையமாகவும், வணிக பூமியாகவும் திகழ்ந்த இந்நகரத்தின் பெருமைகளை இன்றைய இளைய தலைமுறையினர் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும். வரலாற்றுச் சுவடுகளும் நவீன மாற்றங்களும் சங்கமிக்கும் இந்த உன்னதமான மண், இன்று சாதாரண ஒரு நகரமாகத் தென்பட்டாலும், ஒரு காலத்தில் மலாயாவின் பொருளாதார மற்றும் போக்குவரத்து நரம்பு மண்டலமாக விளங்கியது. இளைய தலைமுறையினர் தங்களின் பூர்வீகப் பெருமையையும், இந்நகரம் கடந்து வந்த பாதையையும் உணர்ந்து கொள்வது நம் வரலாற்றைப் பாதுகாப்பதற்குச் சமமாகும்.

கிம்மாஸ் என்ற பெயரைக் கேட்டவுடனேயே மலேசியர்களின் நினைவுக்கு வருவது அதன் பிரம்மாண்ட ரயில் போக்குவரத்துத் துறைதான். இது வெறும் ஒரு ரயில் நிலையம் அல்ல; மலேசியாவின் மேற்குக்கரை ரயில் பாதையும், கிழக்குக்கரை காடுகளின் வழிச் செல்லும் ரயில் பாதையும் ஒன்றாக இணையும் மலேசிய ரயில்வேயின் (KTM) மிக முக்கியச் சந்திப்பு மையமாகத் (Interchange Station) திகழ்ந்தது.

ஒரு காலத்தில் சிங்கப்பூரிலிருந்து பாங்காக் வரை பயணிக்கும் ரயில்கள் இந்நகரத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்பதால், எப்போதும் பயணிகள் மற்றும் தொழிலாளர்களின் நடமாட்டத்தால் கிம்மாஸ் நகரம் 24 மணி நேரமும் சுறுசுறுப்பாகவும் செழுமையாகவும் இயங்கியது.

நகரத்தின் பழமையைப் பறைசாற்றுவதில் அங்குள்ள கட்டடங்களுக்கு முக்கியப் பங்குண்டு. 1922-ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் கட்டப்பட்ட பழைய கிம்மாஸ் ரயில் நிலையம், அதன் பாரம்பரிய அழகோடு இன்றும் பாதுகாக்கப்படுகிறது. தற்போது இது ஒரு வரலாற்று அருங்காட்சியகமாக மாற்றப்பட்டு, பழங்கால டீசல் இன்ஜின்கள் மற்றும் ரயில்வே உபகரணங்களைக் காட்சிப்படுத்தி வருகிறது.

பழங்காலத்தில் பிரம்மாண்ட நீராவி இன்ஜின்களைத் திருப்பி விடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சுழல் மேடையும் (Turntable), நகரின் மையப் பகுதியில் உள்ள மரத்தாலான மற்றும் செங்கற்களால் ஆன முற்காலக் கடைவீதிகளும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்க கால மலாயா வாழ்க்கை முறையை நம் கண்முன்னே நிறுத்துகின்றன.

கிம்மாஸின் செழுமைக்கு அங்கு வாழ்ந்த பல்லின மக்களின் ஒற்றுமையும் உழைப்பும்தான் காரணம். ரயில்வே துறையின் வருகையால் மலாய்க்காரர்கள், சீனர்கள் மற்றும் இந்தியர்கள் (குறிப்பாக ரயில்வே துறையில் பணியாற்றிய தமிழர்கள்) என பல இன மக்கள் இங்கு குடியேறி, ரயில்வே குடியிருப்புகளில் ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தனர்.

மாலை நேரங்களில் ரயில் நிலையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் மக்கள் கூடிப் பேசுவதும், வணிகம் செய்வதும் இந்நகரத்தின் பிரிக்க முடியாத வாழ்வியல் அங்கமாக இருந்தது. ஒரு நகரத்தின் கலாச்சாரத்தை அதன் உணவுகள் மூலமே அறிய முடியும் என்பதால், பழைய கிம்மாஸ் ரயில் நிலையக் காபி கடைகளில் விற்கப்பட்ட பாரம்பரிய 'கோபி டி ஓ' மற்றும் கரியடுப்பில் சுடப்பட்ட 'ரோட்டி பாக்கார்' இன்றும் பல முதியவர்களின் நினைவுகளில் வாழும் சுவையாகும்.

அதோடு, இந்திய ரயில்வே தொழிலாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட காரசாரமான கறி உணவுகளும், உள்ளூர் மலாய் பாணி உணவுகளும் கலந்து ஒரு தனித்துவமான உணவு கலாச்சாரத்தை இங்கு உருவாக்கியுள்ளன.

கிம்மாஸ் வரலாற்றில் மிக முக்கியமான மற்றும் உறைப்படையச் செய்யும் ஒரு சம்பவம் இரண்டாம் உலகப் போரின் போது நிகழ்ந்தது. 14 ஜனவரி 1942 அன்று, ஜப்பானிய ராணுவம் மலாயாவுக்குள் ஊடுருவிய போது, கிம்மாஸ் அருகே உள்ள கெமிஞ்சே பாலத்தில் ஆஸ்திரேலியப் படைகள் ஜப்பானியர்களுக்கு எதிராக ஒரு பயங்கரமான பதுங்கிப் பாயும் தாக்குதலை நடத்தின. இந்தத் தாக்குதலில் ஜப்பானிய ராணுவத்திற்கு பெரும் இழப்பு ஏற்பட்டது. போரின் நினைவாக இன்றும் அங்கு 'சுங்கை கெலாமா நினைவுச் சின்னம்' அமைக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறையினர் அமைதியின் மதிப்பை உணர்ந்து கொள்ள இந்த இடம் ஒரு வரலாற்றுப் பாடமாகும்.

காலத்தின் ஓட்டத்தில், பழைய கிம்மாஸ் தனது செழுமையான நினைவுகளைப் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு, தற்போது நவீன வளர்ச்சியை நோக்கி நடை போடுகிறது. 2012-இல் கட்டப்பட்ட புதிய மின்மயமாக்கப்பட்ட இரட்டைப் பாதை இரயில் நிலையம் (ETS Hub), கிம்மாஸை தற்போதும் மலேசியாவின் முக்கிய போக்குவரத்து மையமாகத் தக்க வைத்துள்ளது.

அதே வேளையில், நெகிரி செம்பிலான் பகுதியில் பழைய நகரம் இருக்க, அதன் எல்லையை ஒட்டி ஜோகூர் பகுதியில் 'கிம்மாஸ் பாரு' என்ற புதிய நவீன வணிக நகரம் உருவாகி வேகமாக வளர்ந்து வருகிறது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் வாழும் இளைய தலைமுறையினர், ஒரு காலத்தில் நாட்டின் பொருளாதாரத்தை இயக்கிய கிம்மாஸ் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களின் கடந்த கால உழைப்பையும் தியாகத்தையும் மறந்து விடாமல் போற்றிப் பாதுகாப்பது அவசியமாகும்.

மலேசியாவில் மரணத் தண்டனை ரத்து செய்யப்பட்டு விட்டதா? –ஓர் அலசல்

மலேசிய சட்டத்துறையில் கடந்த சில ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான மாற்றங்களில் ஒன்று மரணத் தண்டனை தொடர்பான சீர்திருத்தம். பல தசாப்தங்களாக நிலவி வந்த 'கட்டாய மரணத் தண்டனை' (Mandatory Death Penalty) முறையை மலேசிய அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக ரத்து செய்துள்ளது. இருப்பினும், மரணத் தண்டனை என்பது மலேசிய சட்டப் புத்தகத்திலிருந்து முற்றாக நீக்கப்படவில்லை என்பதுதான் யதார்த்தம். 2023-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த சட்டத் திருத்தங்களின்படி, கொலை மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றங்களுக்கு அதுவரை வழங்கப்பட்டு வந்த 'கட்டாய மரணத் தண்டனை' நீக்கப்பட்டது. இதற்குப் பதிலாக, நீதிபதிகளுக்குத் தண்டனையைத் தீர்மானிக்கும் அதிகாரம் (Judicial Discretion) வழங்கப்பட்டுள்ளது.



தற்போது ஒருவருக்கு மரணத் தண்டனைக்கு மாற்றாக:

- 30 முதல் 40 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை.
- ஆண்களுக்குக் குறைந்தது 12 முறை பிரம்படி.

ஆகியவை வழங்கப்படலாம். ஆனால், ஒரு குற்றம் மிகவும் கொடூரமானதாகவோ அல்லது சமூக மனசாட்சியை உலுக்கும் வகையிலோ இருந்தால், நீதிபதி இன்னமும் மரணத் தண்டனையை உறுதிச் செய்ய சட்டத்தில் இடமுண்டு. இதற்குச் சான்றாக அமைந்திருக்கிறது அண்மையில் தீர்ப்பளிக்கப்பட்ட சத்வேந்தர் சிங் பிர்த்பார் என்பவர் சம்பந்தப்பட்ட கொலை வழக்கு.

கொலை கொடூரத்தின் பின்னணி

கடந்த 2016 ஆம் ஆண்டு சிலாங்கூர், ரவாங், தாமான் ரவாங் பெர்டானா 2 ஐ சேர்ந்த ஒரு லோரி ஓட்டுநரான சத்வேந்தர் சிங், தனது 34 வயது மனைவி கமல்ஜித் மற்றும் 7 மாதப் பெண் குழந்தை இஷ்லின் கவுர்

ஆகியோரைக் கொலை செய்த வழக்கு, மலேசிய சட்ட வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். இந்தக் கொலைகள், அவர்களது வீட்டில் அதிகாலை 3.55 முதல் 4.15 மணிக்குள் நிகழ்ந்தன.

இல்லத்தரசியான தனது மனைவிக்கு வேறோர் ஆடவருடன் தொடர்பு இருப்பதாக சத்வேந்தர் சந்தேகித்துள்ளார். இந்த அதீதச் சந்தேகமே கொலையாக உருவெடுத்தது. அவர் தனது மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்றதோடு மட்டுமல்லாமல், பால் குடித்துக் கொண்டிருந்த தனது 7 மாதக் குழந்தையின் பிஞ்சுத் தலையில் தலையணையை வைத்து அழுத்தி, மூச்சடைக்கச் செய்து படுகொலை செய்தார்.

குற்றத்தைச் செய்து விட்டு, சட்டத்திலிருந்து தப்பிக்க சத்வேந்தர் ஒரு சினிமா பாணி நாடகத்தை அரங்கேற்றினார். தான் வீட்டில் இல்லாத போது மர்ம நபர்கள் புகுந்து கொள்ளையடிக்க முயன்றதாகவும், அப்போது தனது மனைவியும் குழந்தையும் கொல்லப்பட்டதாகவும் கூறினார். இதற்காகத் தனது வீட்டின் பின்புறக் கதவின் பூட்டைத் தானே உடைத்து எறிந்து, ஒரு போலித் திருட்டுச் சம்பவத்தை உருவாக்கினார்.

நீதிமன்றப் போராட்டம்

இந்த வழக்கு மூன்று நிலைகளில் விசாரிக்கப்பட்டது:

- ஷா ஆலம் உயர் நீதிமன்றம்: சத்வேந்தரின் வாதங்களைப் பொய் என்று நிராகரித்து, அவருக்கு மரணத் தண்டனை விதித்தது. அதற்கு நீதிமன்றம் கூறிய காரணம், தடயவியல் சோதனையில் வீட்டின் உள்ளே வேறு யாரும் நுழைந்ததற்கான எந்தவோர் அடையாளமும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டது. இரசாயனத்துறை அதிகாரி அளித்த சாட்சியத்தில், கொல்லப்பட்ட மனைவி கமல்ஜித்தின் உடலில் சத்வேந்தர் சிங்கின் டி.என்.ஏ. எனப்படும் மரபணு இருந்ததை உறுதிப்படுத்தினார். இது அவர் மனைவியின் கழுத்தை நெரித்த போது ஏற்பட்ட நேரடித் தொடர்பை உறுதிச் செய்தது. குழந்தை இஷ்லின் பால் குடித்துக் கொண்டிருந்த போதே, சத்வேந்தர் ஒரு தலையணையைப் பயன்படுத்தி அவளது முகத்தை அழுத்தி மூச்சடைக்கச் செய்து கொன்றார் என்பது மருத்துவச் சான்றுகள் மூலம் தெரிய வந்தது.
- சம்பவம் நடந்த அன்று அதிகாலை 3.55 மணிக்கு வீட்டிலிருந்து வெளியேறி ஓர் உணவகத்திற்குச் சென்றதாகவும், அங்கிருந்து வேலைக்குச் சென்றதாகவும் சத்வேந்தர் தனது தற்காப்பு வாதத்தில் கூறினார். ஆனால், அவர் கூறிய நேரத்திற்கும் அவர் வேலைக்குச் சென்றடைந்த நேரத்திற்கும் இடையே பெரிய இடைவெளி இருந்ததாலும், அதை நிரூபிக்கத் தவறியதாலும் நீதிமன்றம் அதை நிராகரித்தது. மனைவி கமல்ஜித்தைத் திருமணத்திற்குப் பிறகு அவர் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் நீண்ட காலம் சித்திரவதை செய்து வந்ததாக அரசுத் தரப்பு ஆதாரத்துடன் நீதிமன்றத்தில் நிரூபித்தது. தனது மனைவி கமல்ஜித் சிங் வேறு ஒருவருடன் கள்ளத் தொடர்பு வைத்திருப்பதாக சத்வேந்தர் தீவிரமாகச் சந்தேகித்துள்ளார். இதுவே கொலையைச் செய்வதற்கு அவருக்கு முதன்மையானத் தூண்டுதலாக இருந்துள்ளது என்பதையும் பிராசிகியூஷன் தரப்பு நிரூபித்தது.
- புத்ரா ஜெயா மேல்முறையீட்டு நீதிமன்றம்: 2023-இல் மரணத் தண்டனையில் சட்ட மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, சத்வேந்தருக்கு விதிக்கப்பட்ட மரணத் தண்டனையை 20 ஆண்டுச் சிறையாகக் குறைத்தது. மேலும், குழந்தையின் மரண வழக்கில் போதிய சான்றுகள் இல்லை எனக் கூறி அவரை விடுவித்தது.
- கூட்டரசு நீதிமன்றம் (இறுதித் தீர்ப்பு): இந்தத் தீர்ப்பை எதிர்த்து அரசுத் தரப்பு (Prosecution) மேல்முறையீடு செய்தது. இந்த மேல்முறையீட்டில் அரசுத் தரப்பு வழக்கறிஞர்கள் மிக வலுவான ஆதாரங்களை முன்வைத்தனர். "இது ஒரு திட்டமிட்ட படுகொலை. தன்னைத் தற்காத்துக் கொள்ளத் தெரியாத ஒரு பச்சிளம் குழந்தையைச் சொந்தத் தந்தையே கொன்றது மனிதத்தன்மையற்றச் செயல். கள்ளத் தொடர்பு என்ற சந்தேகம் இக்கொடூரத்திற்கு நியாயமாகாது" என்று வாதிட்டனர். மேலும், தடயவியல் சோதனையில் வீட்டின் உள்ளே வெளிநபர்கள் யாரும் நுழையவில்லை என்பதும், சத்வேந்தரின் னுசூஹ மனைவியின் உடலில் இருந்ததும் நிரூபிக்கப்பட்டது.

* மரணத் தண்டனையை உறுதிச் செய்த நீதிபதிகளின் காரணம்: 2025 மார்ச் 14 அன்று (தற்செயலாக சத்வேந்தரின் 39-வது பிறந்தநாள்), கூட்டரசு நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பை வழங்கியது. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்த நீதிபதிகள், மரணத் தண்டனையை மீண்டும் உறுதிச் செய்தனர்.

நீதிபதிகள் கூறிய முக்கிய காரணங்கள்: ஒரு தற்காப்பற்ற கைக்குழந்தையை அதன் தந்தை கொன்றது "அரிதிலும் அரிதான" (சுயசநளவ டிக சயசந) குற்றமாகும். கட்டாய மரணத் தண்டனை நீக்கப்பட்டாலும், இத்தகையக் கொடூரமான குற்றங்களுக்கு மரணத் தண்டனை வழங்குவது அவசியமானது. இது போன்ற குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்குவதே சமூகத்திற்குச் சரியான செய்தியைச் சொல்லும் என்று கூட்டரசு நீதிமன்றம் தனது அதிரடித் தீர்ப்பில் தெரிவித்தது.

மலேசியாவில் மரணத் தண்டனை என்பது சட்ட ரீதியாக முற்றாக ஒழிக்கப்படவில்லை. மாறாக, அது நீதிபதிகளின் விருப்பத்திற்கு விடப்பட்டுள்ளது. சத்வேந்தர் சிங் வழக்கு உணர்த்துவது என்னவென்றால், கொடூரமான குற்றங்கள் புரியும் எவரும் "சட்டம் மாறி விட்டது" என்ற போர்வையில் மரணத் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது என்பதாகும். மலேசிய நீதித்துறை இன்றும் நீதியின் மாண்பையும், உயிர்களின் மதிப்பையும் காப்பதில் உறுதியாக உள்ளது என்பதற்கு இந்தத் தீர்ப்பே சாட்சி.

–இ.எம். சாமி

சொல்லுங்க, சொல்லுங்க...

குழந்தைகள் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் இதோ:

உங்களுக்கு இந்த மலேசியப் பொது அறிவு கேள்விகளுக்குப் பதில் தெரியுமா?

1. மலேசியாவில் ஆசிரியர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

A) மே 1

B) மே 16

C) ஆகஸ்ட் 31

D) செப்டம்பர் 16

2. மலேசியாவின் தேசிய மலர் எது?

A) ஆர்க்கிட் (Orchid)

B) ரோஜா (Rose)

C) செம்பருத்தி (Hibiscus)

D) மல்லிகை (Jasmine)

4. மலேசியாவின் தேசியப் பண்ணின் பெயர் என்ன?

A) ஜாலூர் ஜெமிலாங் (Jalur Gemilang)

B) நெகாராகூ (Negaraku)

C) மலேசியா பிரிஹத்தின் (Malaysia Prihatin)

D) தனா ஆயர்கூ (Tanah Airku)

5. மலேசியாவின் தேசியக் கொடி பொதுவாக எப்படி அழைக்கப்படுகிறது?

A) சங் சாகா (Sang Saka)

B) ஜாலூர் ஜெமிலாங் (Jalur Gemilang)

C) பெண்டேரா மலேசியா ராயா (Bendera Malaysia Raya)

D) ஜாலூர் நெகாரா (Jalur Negara)

விடைகள்

பதில்: B) மே 16

பதில்: C) செம்பருத்தி

பதில்: B) நெகாராகூ

பதில்: C) ஐந்து

பதில்: B) ஜாலூர் ஜெமிலாங்

சொல்லுங்க, சொல்லுங்க...

இந்தக் கேள்விக்குப் பதில் தெரியுமா?

1. நான் வெள்ளையாகவும் சின்னதாகவும் இருப்பேன். போர்டு முழுவதையும் எழுத்துக்களால் நிரப்புவேன். நாளடைவில் நான் கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுசாகி விடுவேன்.

   நான் யார்?

2. என்னால் பேசவும் முடியாது, எழுதவும் முடியாது. ஆனாலும், தவறுகளை அழிப்பேன். பழைய பாடங்களை அழித்துவிட்டு, புதிய பாடங்கள் தொடங்க உதவுவேன்.

   நான் யார்?

3. நான் வகுப்பறையின் முன்னால் நிற்பேன். என்னில் எழுத்துக்களும் எண்களும் ஓவியங்களும் நிறைந்திருக்கும். புதிய விஷயங்களைக் கற்கும் குழந்தைகளின் கண்கள் எப்போதும் என் மீதே இருக்கும்.

   நான் யார்?

4. என்னில் பல சிறிய கட்டங்கள் இருக்கும். ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொருவரின் பெயர் இருக்கும். ஆசிரியர் என் மூலமாகப் பெயர்களை வாசிக்கும்போது, யாராவது ஒருவர் "பிரசென்ட் மிஸ்!" என்று பதில் கூறுவார்கள்.

   நான் யார்?

விடைகள்

1. சாக்பீஸ் (Chalk) 2 இரேசர் / அழிப்பான் (Eraser) 3, கரும்பலகை (Blackboard) பதில்: வருகைப் பதிவேடு (Attendance register)

பொருளைக் கண்டுபிடிக்க முடியுமா?

படங்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.

வானிலை கணிப்பில் டிஜிட்டல் புரட்சி

மலேசிய வானிலை ஆய்வுத் துறை (MET Malaysia), மலேசியாவின் இயற்கை வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு முக்கிய ஏஜென்சியாகும். பொதுமக்களின் பாதுகாப்பு, விமானப் போக்குவரத்து மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகியவற்றிற்குத் தேவையான துல்லியமான வானிலை முன்னறிவிப்புகள், பூகம்பம் மற்றும் சுனாமி எச்சரிக்கைகளை வழங்குவதில் இந்த அமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது.

மலேசியாவின் வானிலை கண்காணிப்பு வரலாறு பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே தொடங்கி விட்டது. ஆரம்பத்தில், விவசாயம் மற்றும் கப்பல் போக்குவரத்துக்குத் தேவையான மழைப் பொழிவு மற்றும் வெப்பநிலைத் தரவுகளைச் சேகரிக்க சில ஆங்காங்கே அமைக்கப்பட்ட நிலையங்கள் மட்டுமே இருந்தன. சுதந்திரத்திற்குப் பிறகு, 1958-ஆம் ஆண்டில் போக்குவரத்து அமைச்சின் கீழ் 'மலேசிய வானிலைச் சேவை' அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டது.

நாட்டின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப, இந்த அமைப்பு 1984-இல் அறிவியல், தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுக்கு மாற்றப்பட்டது. மேலும் நவீனமயமாக்கலை நோக்கி நகர்ந்த இந்த அமைப்பு, 2006 செப்டம்பர் 28 அன்று 'மலேசிய வானிலை ஆய்வுத் துறை' என மறுபெயரிடப்பட்டது. இந்தத் துறை நாடு முழுவதும் 24 மணி நேரமும் இடைவிடாது செயல்படும் ஒரு கண்காணிப்பு வலையமைப்பைக் கொண்டுள்ளது. தரைப்பரப்பு, கடல் மற்றும் வான்வெளி எனப் பல்வேறு நிலைகளில் இருந்து வெப்பநிலை, காற்றின் வேகம், ஈரப்பதம் மற்றும் காற்று அழுத்தம் போன்ற வானிலைக் கூறுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. சேகரிக்கப்படும் பில்லியன் கணக்கான தரவுகள், அதிநவீன சூப்பர் கணினிகள் மற்றும் எண் வானிலை முன்னறிவிப்பு மாதிரிகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. பருவமழைக் காலங்கள், கடுமையான இடியுடன் கூடிய மழை மற்றும் சூறாவளி போன்ற காலங்களில் பொதுமக்களுக்கும் அரசாங்க அமைப்புகளுக்கும் முன்கூட்டியே எச்சரிக்கைகளை இந்தத் துறை அனுப்புகிறது. விமானங்களின் பாதுகாப்பான இயக்கத்திற்கும், மாலுமிகளின் பாதுகாப்புக்கும் தேவையான பிரத்தியேக வானிலை அறிக்கைகளை வழங்குவதோடு, கடலில் ஏற்படும் பூகம்பங்களைக் கண்டறிந்து, சுனாமி அச்சுறுத்தல் இருந்தால் 10 நிமிடங்களுக்குள் தேசிய சுனாமி முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பு மூலம் எச்சரிக்கிறது.

தொழில்நுட்பம் வளராத ஆரம்பக் காலங்களில், மலேசிய வானிலை ஆய்வுத் துறை மனித உழைப்பையும் எளிமையான இயந்திரக் கருவிகளையும் மட்டுமே நம்பியிருந்தது. ஒரு குறிப்பிட்ட உருளைக் கலனில் சேகரிக்கப்படும் மழை நீரை, ஊழியர்கள் தினமும் அளவுகோல் கொண்டு கைமுறையாக அளந்த பாரம்பரிய மழைமானிகள் பயன்படுத்தப்பட்டன. வளிமண்டல அழுத்தத்தை அளவிட பாதரசம் நிரப்பப்பட்ட கண்ணாடிக் கொள்கலன் கொண்ட காற்றழுத்தமானிகள் உதவின.

மரப் பெட்டி போன்ற அமைப்பைக் கொண்ட ஸ்டீவன்சன் ஸ்கிரீன் எனப்படும் கருவிக்குள் ஈர மற்றும் உலர் குமிழ் வெப்பமானிகள் வைக்கப்பட்டு, சுற்றுப்புற வெப்பநிலையும் ஈரப்பதமும் கைமுறையாகக் குறிக்கப்பட்டன. காற்றின் வேகத்தைக் கணக்கிட சுழலும் கோப்பைகளைக் கொண்ட எளிய காற்றுமானிகள் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் தரவுகள் மனிதர்களால் நேரடியாகப் பதிவு செய்யப்பட்டன. தற்போது, மனிதத் தவறுகளைக் குறைக்கவும், நிகழ்நேரத் தரவுகளைப் பெறவும் இந்தத் துறை மிக நவீன டிஜிட்டல் மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.

மலேசியா முழுவதும் நூற்றுக்கணக்கான தானியங்கி வானிலை நிலையங்கள் உள்ளன. இந்த நிலையங்களில் உள்ள டிஜிட்டல் சென்சார்கள் மூலம் தரவுகள் உடனுக்குடன் சேகரித்து, தலைமை அலுவலகத்திற்குத் தானாகவே அனுப்பப்படுகின்றன. மேகங்களின் அடர்த்தி, மழைப்பொழிவு நகரும் திசை மற்றும் அவற்றின் தீவிரத்தை மிகத் துல்லியமாகக் கணிக்க மலேசியாவில் 11-க்கும் மேற்பட்ட அதிநவீன வானிலை ரேடார் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வான்வெளியில் 30 கிலோமீட்டர் உயரம் வரை உள்ள வானிலையை ஆராய, பெரிய பலூன்களில் 'ரேடியோசொண்ட்' என்ற சென்சார் கருவிகள் கட்டி அனுப்பப்பட்டு வளிமண்டலத்தின் மேல் அடுக்குத் தரவுகள் பெறப்படுகின்றன. ஜப்பானின் ஹிமாவாரி போன்ற மேம்பட்ட வானிலை செயற்கைக்கோள்களில் இருந்து பெறப்படும் உயர்தரப் புகைப்படங்கள் மூலம், மேகக் கூட்டங்களின் உருவாக்கம் மற்றும் புயல் நகர்வுகளை மலேசிய வானிலை ஆய்வுத் துறை கண்காணிக்கிறது. கடலோரப் பகுதிகளில் கடல் மட்ட மாற்றங்களை அறிய அலைமானிகளும், சுனாமி வந்தால் பொதுமக்களை எச்சரிக்க 2.5 கிலோமீட்டர் சுற்றளவுக்குக் கேட்கக்கூடிய சைரன்களும் பொருத்தப்பட்டுள்ளன.

எளிய காகிதக் குறிப்புகளில் தொடங்கிய மலேசிய வானிலை ஆய்வுத் துறையின் பயணம், இன்று உலகளாவிய வளிமண்டல கண்காணிப்பு நிலையங்களை இயக்கும் அளவிற்கு பிரம்மாண்டமாக வளர்ந்துள்ளது. தனது 'அலஊரயஉய' மொபைல் செயலி மற்றும் இணையச் சேவைகள் மூலம் பொதுமக்களுக்குத் தடையற்ற, துல்லியமான வானிலைத் தகவல்களை வழங்கி, டிஜிட்டல் மலேசியாவின் பாதுகாப்பிற்கு மலேசிய வானிலை ஆய்வுத் துறை ஒரு வலுவான அரணாகத் திகழ்கிறது.

இளம் நிருபர்

என் இளம் நிருபர் கதை

பெயர்: _____

வயது: _____

பள்ளி: _____

ஊர் / மாநிலம்: _____

_____

உங்கள் கதை | உங்கள் குரல் | உங்கள் செய்தித்தாள்

இந்த வாரத் தலைப்பு:

மலேசியாவில் எனக்குப் பிடித்த இடம்

மலேசியாவில் உங்களுக்கு மிகவும் பிடித்த இடம் எது?

அது அழகான கடற்கரையாக இருக்கலாம், பசுமையான பூங்காவாக இருக்கலாம், வரலாற்றுச் சிறப்புமிக்க அருங்காட்சியகமாக இருக்கலாம். நகரம், கிராமம், ஆலயம், சுற்றுலாத் தலம் அல்லது உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள சிறப்பு இடமாகவும் இருக்கலாம்.

நீங்கள் விரும்பும் அந்த இடத்தைப் பற்றி 50 முதல் 100 சொற்களில் எழுதி, உங்கள் அனுபவத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கட்டுரையில் இடம் பெற வேண்டிய தகவல்கள்:

இடம்	: அந்த இடம் எங்கு அமைந்துள்ளது?
வருகை	: நீங்கள் எப்போது அந்த இடத்திற்குச் சென்றீர்கள்?
அனுபவம்	: அங்கு என்ன பார்த்தீர்கள்?
பிடித்த அம்சம்	: அந்த இடத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன?
பரிந்துரை	: மற்றவர்கள் அந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்று நீங்கள் ஏன் நினைக்கிறீர்கள்?

என் கதை - நிருபர் சவால்

உங்கள் கட்டுரைக்கு ஒரு சுவாரஸ்யமான தலைப்பை உருவாக்குங்கள்!

என் தலைப்பு :

புகைப்படப் பகுதி

நீங்கள் எழுதிய இடத்தின் புகைப்படத்தையோ அல்லது அந்த இடத்தில் நீங்கள் எடுத்துக் கொண்ட புகைப்படத்தையோ எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் அனுபவம், உங்கள் பார்வையில் - இளம் நிருபராக உங்கள் கதையை எங்களிடம் பகிருங்கள்!

மலேசியா சுதந்திரம் அடைவதற்கு முன்பும், அதற்குப் பின்னருமான காலக்கட்டங்களில், நாட்டின் சமூகப் பாதுகாப்பு மற்றும் பொதுநலத் திட்டங்களுக்குப் போதிய அரசு நிதி ஒதுக்கீடு செய்வது ஒரு சவாலாக இருந்தது. குறிப்பாக, வறுமை ஒழிப்பு, முதியோர் இல்லங்கள் பராமரிப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள் மற்றும் இயற்கைப் பேரிடர் நிவாரணங்கள் போன்றவற்றுக்கு உடனடி நிதி தேவைப்பட்டது.

நலிவுற்றோரின் வாழ்வை உயர்த்திய வரலாற்று நிதித் திட்டம்

'LACK OF FUNDS BIG HANDICAP'
UMNO will start big sweep for welfare
'Funeral' collectors come to grief
THEY ASK FOR $2,000 AID
The Straits Times Tuesday, September 16, 1952
NEW ALHAMBRA OPENS TODAY!
LOVE FOR ONE WOMAN TURNED HIM AWAY FROM GOD... COULD THE BLIND LOVE OF ANOTHER LEAD HIM BACK?
JOURNEY INTO LIGHT

மலேசியா ஓர் இஸ்லாமிய நாடாக இருப்பதால், சூதாட்டம் மற்றும் லாட்டரி முறைகள் இஸ்லாமிய ஷரியா கொள்கைகளுக்குப் புறம்பானவை என்ற கருத்து வலுப் பெற்றது.

நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து, சமூக நலத் திட்டங்களுக்கான நிதியை அரசாங்கம் தனது தேசிய வரவு செலவுத் திட்டத்தின் (ஷுரனபநவ) மூலமாகவே நேரடியாக ஒதுக்கத் தொடங்கியது. லாட்டரிக்கு மாற்றாக, பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வு (ஊளுசு) நிதிகள் மற்றும் பொதுமக்களின் வரி விலக்கு பெற்ற நன்கொடைகள் ஊக்குவிக்கப்பட்டன.

மலேசியாவின் சமூகப் பாதுகாப்பு வரலாற்றில் சமூக நல இலாகா நடத்திய சமூக நல லாட்டரித் திட்டம் ஒரு மிக முக்கியமான அங்கமாகும். தற்போதைய காலக்கட்டத்தில் இந்த லாட்டரி முறை செயல்பாட்டில் இல்லை.1989 ஆம் ஆண்டு இந்த லாட்டரி குலுக்கு அதிகாரப்பூர்வமாக நிறுத்தப்பட்டது.

நாட்டின் ஆரம்பகால உள்கட்டமைப்பு மற்றும் ஏழை மக்களின் மேம்பாட்டிற்கு இது ஆற்றிய பங்கு அளப்பரியது. இன்று மலேசிய அரசு, முற்றிலும் முறையான அரசாங்க நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நவீன சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் நலிவுற்றோரைப் பாதுகாக்கும் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்து வருகிறது.

இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய, அரசாங்கமும் சமூக நல இலாகாவும் இணைந்து சமூக நல லாட்டரி என்ற பொது நிதியளிப்பு முறையைத் தொடங்கின. நாட்டின் மிக ஏழ்மையான குடும்பங்களுக்கு மாதாந்திர உதவிகள் மற்றும் அவசர நிதியுதவி வழங்குதல், ஆதரவற்றவர்கள் இல்லங்கள், முதியோர் காப்பகங்கள் மற்றும் மாற்றுத் திறனாளி மறுவாழ்வு மையங்களின் உள்கட்டமைப்பை மேம்படுத்துதல் முதலிய நோக்கங்களுக்கு நிதி திரட்டுவதற்காக இந்த சமூக நல லாட்டரிச் சீட்டுத் திட்டம் நடத்தப்பட்டது.

தவிர ஏழைக் குழந்தைகளுக்குப் பள்ளிக் கல்விக்கான நிதியுதவி மற்றும் ஏழை நோயாளிகளுக்கு மருத்துவச் செலவுகளைக் கவனித்தல், அரசாங்கத்துடன் இணைந்து செயல்படும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குவதற்கும் இந்தத் திட்டம் பயன் அளித்தது.

பொதுமக்களுக்குக் ஒரு ரிங்கிட் விலையில் லாட்டரிச் சீட்டுகள் விற்கப்பட்டன. பொதுமக்கள் இதனை ஓர் அதிர்ஷ்ட விளையாட்டாகவும், அதே வேளையில் ஏழைகளுக்கு உதவும் தர்மச் செயலாகவும் கருதி ஆர்வத்துடன் வாங்கினர். கோலாலம்பூர், ஜாலான் ஹாங் லெக்யூ- வில் வீற்றிருந்த சிலாங்கூர் அம்னோ கட்டடத்தில்தான் இந்த லாட்டரிக் குலுக்கு அலுவலகம் இருந்தது. பரிசுத் தொகை, 1950 மற்றும் 1960-களில் முதல் பரிசாக ரூ350,000 டாலர்கள் வரை (அப்போதைய மலாயா டாலர் மதிப்பு) வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த ஜோகூர் பாரு, மலாக்கா, போர்ட் சுவெட்டன்ஹாம் (தற்போதைய போர்ட் கிள்ளான்) மற்றும் கேமரன் ஹைலண்ட்ஸ் போன்ற இடங்களில் பொதுமக்கள் முன்னிலையில் இக்குலுக்கல்கள் நடத்தப்பட்டுள்ளன.



இந்தச் சீட்டு விற்பனையின் மூலம் திரட்டப்படும் பெரும் தொகையில், ஒரு பகுதி வெற்றியாளர்களுக்குப் பரிசுகளாக வழங்கப்பட்டது.

மீதமுள்ள பெரும் பகுதி (இலாபம் முழுவதும்), சமூக நல இலாகாவின் கீழ் இயங்கும் சமூக நல வாரிய நிதிக்காக நேரடியாக மாற்றப்பட்டது.

காலப்போக்கில், இந்த சமூக நல லாட்டரித் திட்டம் பெரும் நிதிப் பங்களிப்பை வழங்கிய போதிலும், சில முக்கியக் காரணங்களால் நிறுத்தப்பட்டது.

பசுமைப் பெருந்தோட்டத்தின் வான்வழிப் பாதை:

ஜெண்ராட்டா தோட்டம் விமானத் திடல்

பேராக் மாநிலத்தில், தெலுக் இந்தான் நகருக்கு அருகிலுள்ள ஊத்தான் மெலிந்தாங் பகுதியில் அமைந்துள்ள ஜெண்ராட்டா வானூர்தி நிலையம் (துநனேயசயவய ஹசையீடிசவ - ஐஊஹடீ: றுஆஹது), மலேசியப் பெருந்தோட்ட வரலாற்றில் தனக்கென ஒரு வான்வழிப் பாதையைக் கொண்டுள்ள ஒரு தனித்துவமான தனியார் விமானத் திடலாகும்.

1906-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க யுனைடெட் பிளான்டேஷன்ஸ் (United Plantations Berhad) நிறுவனத்திற்குச் சொந்தமான இந்தத் திடல், 1930-களின் பிற்பகுதியில் செம்பனை மற்றும் தென்னைத் தோட்டங்களின் போக்குவரத்துச் சவால்களை எதிர்கொள்வதற்காக உருவாக்கப்பட்டது. அக்காலத்தில் தோட்டங்களில் இருந்து கோலாலம்பூர்

அல்லது பினாங்கு போன்ற பெருநகரங்களுக்குச் சாலை மற்றும் ஆற்றின் வழியாகப் பயணிக்க மூன்று பகல்களும் இரண்டு இரவுகளும் தேவைப்பட்ட நிலையில், இந்த 830 மீட்டர் நீளமுள்ள தார் ஓடுதளம் அந்தப் பயண நேரத்தைச் சில மணி நேரங்களாகக் குறைத்து பெருந்தோட்ட நிர்வாகத்தில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தியது.

இந்த விமானத் திடலின் நவீனமயமாக்கலிலும் அதன் உன்னதமான பயன்பாட்டிலும், மலேசியச் செம்பனைத் துறையின் முடிசூடா மன்னர் என்று அழைக்கப்படும் டான் ஸ்ரீ போர்ஜ் பெக் நெல்சன் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். 1951-இல் டென்மார்க்கிலிருந்து ஓர் உதவிப் பொறியாளராக மலாயாவுக்கு வந்து, பின்னர் இந்நிறுவனத்தின் தலைவராகவும் தலைமைச் செயல்முறை அதிகாரியாகவும் உயர்ந்த பெக் நெல்சன், ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமல்லாது தகுதி வாய்ந்த இலகுரக விமான ஓட்டியாகவும் திகழ்ந்தார்.

பெக் நெல்சன், இந்த ஓடுதளத்தை வெறும் போக்குவரத்து வசதியாகப் பார்க்காமல், பரந்து விரிந்த செம்பனைத் தோட்டங்களின் உள்கட்டமைப்பை வான்வழியாகக் கண்காணிக்கும் ஒரு முதன்மையான நிர்வாகக் கருவியாகப் பயன்படுத்தினார். தனது சொந்த இலகுரக விமானத்தில் இந்த ஓடுதளத்திலிருந்து பறந்து, தோட்டத்தின் நீர்ப்பாசனக் கால்வாய்கள், சாலைகளின் தரம் மற்றும் செம்பனை மரங்களின் வளர்ச்சி ஆகியவற்றை நேரடியாகக் கண்காணித்ததோடு, மலேசியாவிலேயே முதன்முறையாகச் செம்பனைத் தோட்டங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகளை வான்வழியாகத் தெளிக்கும் நவீன உத்தியையும் இந்தத் திடலை மையமாகக் கொண்டே அவர் அறிமுகப்படுத்தினார்.

அவரது நிர்வாகத் திறமையையும் தாண்டி, இந்த ஜெண்ராட்டா விமான ஓடுதளம் தோட்டத் தொழிலாளர்களின் உயிர்காக்கும் மனிதாபிமானப் பாதையாகவும் விளங்கியது. அக்காலத்தில் நகர்ப்புற மருத்துவமனைகளுக்கான சாலை வசதிகள் மிக மோசமாக இருந்ததால், தோட்டத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கோ அல்லது அவர்களின் குடும்பத்தினருக்கோ கடுமையான உடல்நலக்குறைவு அல்லது பிரசவக் கால அவசரங்கள் ஏற்படும் போது, பெக் நெல்சன் தனது சொந்த விமானத்தையே ஒரு வான்வழி ஆம்புலன்ஸ் போலப் பயன்படுத்தினார்.

இந்த ஓடுதளத்திலிருந்து அவசர அவசரமாகப் பறந்து, பாதிக்கப்பட்ட தொழிலாளர்களைப் பெருநகர மருத்துவமனைகளுக்கு ஏற்றிச் சென்று பல உயிர்களை அவர் காப்பாற்றியுள்ளார். மேலும், பேராக் ஆற்றில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் போது சாலைப் போக்குவரத்து துண்டிக்கப்படும் குடியிருப்புகளுக்குத் தேவையான அவசர மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இந்த ஓடுதளத்திலிருந்து விமானம் மூலம் கொண்டு சேர்த்து தொழிலாளர்களின் அரணாக அவர் திகழ்ந்தார்.

டான் ஸ்ரீ பெக் நெல்சன் தனது வாழ்நாளில், தமது தாய்நாடான டென்மார்க்கை விடவும் மலேசியா மற்றும் அதன் தோட்டத் தொழிலாளர்கள் மீது இருந்த பற்று குறித்து பலமுறை உருக்கமாகப் பேசியுள்ளார். அவரது மறைவிற்குப் பிறகு, அவரது மற்றொரு மகனான மார்ட்டின் பெக் நெல்சன் ஹகுளு செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் தன் தந்தை அடிக்கடி கூறிய வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்:

"அவர் இந்த நாட்டை நேசித்தார், இங்கிருந்த மக்களை நேசித்தார். கம்யூனிச அவசரக் காலத்தின் போது பலமுறை தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்ல நினைத்தாலும், இங்கிருந்த மக்கள் மீது அவருக்கு இருந்த கருணையும், தோட்டத்தின் மீது இருந்த காதலும்தான் அவரை இங்கேயே தங்க வைத்தது. அதற்கு அவர் ஒரு போதும் வருத்தப்பட்டதே இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார். கம்யூனிச அவசரக் கால அச்சுறுத்தல்கள் நிறைந்த காலகட்டத்திலும், சாலைகள் இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதிகளுக்கு நடுவிலும், இந்த விமானங்களையும் ஓடுதளத்தையும் அவர் வெறும் ஆடம்பரமாகக் கருதாமல், உள்கட்டமைப்பை விரைவாகக் கண்காணிக்கவும், தொழிலாளர்களுக்கு மருத்துவ அவசர உதவிகளைச் செய்யவும் ஓர் அத்தியாவசிய நிர்வாகக் கருவியாகவே பயன்படுத்தினார் என்பதை இந்த மனிதாபிமானப் பின்புலம் நமக்கு உணர்த்துகிறது.

2005-ஆம் ஆண்டு டான் ஸ்ரீ பெக் நெல்சன் மறைந்த பிறகும், அவரது மகன்களான டத்தோ கார்ல் பெக் நெல்சன் மற்றும் மார்ட்டின் பெக் நெல்சன் ஆகியோரின் கீழ் இந்த வான்வழிப் பாரம்பரியம் இன்றும் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது. ராயல் சிலாங்கூர் பறக்கும் கழகம் போன்ற பயிற்சிப் பள்ளிகளின் இலகுரக விமானப் பயிற்சிகளுக்கும், அவசரக் காலத் தேவைகளுக்கும் மட்டுமே பயன்படுத்தப்படும் இந்தத் தனியார் விமானத் திடல், வணிகப் போக்குவரத்திற்கு

அப்பாற்பட்டது.

செம்பனைத் தோட்டங்களின் பசுமைப் பரப்பிற்கு நடுவே இன்றும் கச்சிதமாகப் பராமரிக்கப்பட்டு வரும் இந்த ஜெண்ராட்டா ஓடுதளம், மலேசிய விவசாயத் துறையின் நவீன உள்கட்டமைப்பிற்கு ஒரு சிறந்த வரலாற்றுச் சான்றாக மட்டுமன்றி, டான் ஸ்ரீ பெக் நெல்சன் என்ற மாமனிதரின் தொலைநோக்கு சிந்தனைக்கும், தொழிலாளர்கள் மற்றும் இந்த நாட்டின் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய மனிதாபிமானத்திற்கும் ஓர் உன்னத அடையாளமாக நிமிர்ந்து நிற்கிறது.

பில்லியன்களைச் சுருட்டிப் பறந்த ஜோ லோ:

அனைத்துலக போலீசையே அலறவிடும் 'டிமிக்கி' பின்னணி

ஜோ லோ சட்டத்தின் பிடியில் சிக்காமல் தொடர்ந்து டிமிக்கி கொடுத்து (தலைமறைவாக) வருவதற்கு அவருடைய அபாரமான பண பலம், அனைத்துலகச் செல்வாக்கு, போலி அடையாளங்கள் மற்றும் வெளிநாட்டுச் சக்திகளின் ரகசிய ஆதரவு ஆகியவைதான் முதன்மையான காரணங்களா?

மலேசிய வரலாற்றின் மிகப் பெரிய நிதி ஊழலாகக் கருதப்படும் 1MDB (1Malaysia Development Berhad) திட்டத்தில் இருந்து சுமார் 4.5 பில்லியன் அமெரிக்க டாலர் நிதியை முறைகேடாகக் கையாடல் செய்ததாக ஜோ லோ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 2016-ஆம் ஆண்டு முதல் இண்டர்போல் எனும் அனைத்துலக போலீசாரால் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட போதிலும், அவர் இன்னும் பிடிபடாமல் இருப்பது அனைத்துலக அளவில் ஒரு பெரும் புதிராகவே நீடிக்கிறது.

திருடப்பட்ட பில்லியன் கணக்கான டாலர்களில் கணிசமான பகுதி இன்னும் ஜோ லோவின் கட்டுப்பாட்டில் இருப்பதாக நம்பப்படுகிறது.



இந்த அபாரமான பண பலத்தைக் கொண்டு, தனக்குச் சாதகமான நபர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரை விலைபேசி அவர் தனக்கான தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்து கொள்கிறார்.

மேலும், ஜோ லோ தனது உண்மையான அடையாளத்தை மறைத்து, போலி கடப்பிதழ்களைப் பயன்படுத்தி உலக நாடுகளை ஏமாற்றி வருகிறார். குறிப்பாக, 'கான்ஸ்டான்டினோஸ் அகிலிஸ் வெயிஸ்' என்ற கிரேக்கப் பெயரிலான போலி ஆஸ்திரேலிய கடப்பிதழைப் பயன்படுத்தி அவர் சுதந்திரமாக நடமாடுவதாகக் கூறப்படுகிறது. ஜோ லோ தற்போதைய நிலவரப்படி ஷாங்காய் (சீனா), மக்காவ் அல்லது மியன்மார் போன்ற பிராந்தியங்களில் சொகுசுப் பங்களாக்களில் வசித்து வருவதாக உளவுத்துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்குள்ள சில உயர் மட்ட அரசியல் மற்றும் வணிக சக்திகளுக்கு நிதி ரீதியாக அவர் உதவுவதால், அவர்கள் ஜோ லோவை மலேசிய அதிகாரிகளிடம் ஒப்படைக்காமல் ரகசியப் பாதுகாப்பு அளித்து வருகின்றனர்.

அண்மையில் ஜோ லோ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிடம் தனக்கு விதிக்கப்பட்ட குற்றவியல் வழக்குகளில் இருந்து விடுபட பொதுமன்னிப்பு கோரி விண்ணப்பித்துள்ளார். இந்த சட்டப்பூர்வமான நுணுக்கங்களையும், அமெரிக்க அதிகாரிகளுடன் மேற்கொள்ளும் ரகசிய சமரச உடன்படிக்கைகளையும் அவர் தப்பிப்பதற்கான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகிறார்.

மலேசியாவின் முன்னாள் பிரதமர் டத்தோ ஸ்ரீ நஜிப் ரசாக்குடன் இணைந்து இந்த சதித் திட்டத்தை ஜோ லோ செயல்படுத்தியதாக நீதிமன்றத் தீர்ப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன. மலேசியாவிற்குத் திரும்பினால் மேலும் பல முக்கியப் புள்ளிகளின் பெயர்கள் வெளியில் வரக்கூடும் என்பதால், கண்ணுக்குத் தெரியாத சில அரசியல் சக்திகளும் அவர் பிடிபடுவதைத் தாமதப்படுத்த விரும்புவதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சுருக்கமாகக் கூறின், ஜோ லோ சட்டத்தின் பிடியில் இருந்து டிமிக்கி கொடுப்பதற்கு அவரது சுயநல புத்திசாலித்தனம் மட்டுமே காரணம் அல்ல; மாறாக அனைத்துலக அளவில் அவர் கொண்டுள்ள பண பலம், போலி ஆவணங்கள் மற்றும் அவருக்குப் பின்னால் இருக்கும் அதிகார வர்க்கத்தின் மறைமுக ஆதரவுமே ஆகும். எனினும், மலேசிய அரசாங்கமும், போலீஸ் படையும் அனைத்துலக நாடுகளுடன் இணைந்து அவரை நாட்டிற்குக் கொண்டு வந்து சட்டத்தின் முன் நிறுத்த தொடர்ந்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

லங்காவி தீவின் புதிய சவால்கள்

மலேசியாவின் 'கெடா மாநிலத்தின் மகுடம்' என்று வர்ணிக்கப்படும் லங்காவி தீவு, உலகளாவிய சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக விளங்கி வருகிறது. குறிப்பாக, நாட்டின் 4-ஆவது மற்றும் 7-ஆவது பிரதமரான துன் டாக்டர் மகாதீர் முகமது அவர்களின் ஆட்சிக்காலத்தில், லங்காவிக்குக் கிடைத்த உலகளாவிய அங்கீகாரமும் செழுமையும் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

1987-இல் லங்காவிக்கு வழங்கப்பட்ட 'தீர்வை அற்ற தீவு' (Duty-Free Island) என்ற அந்தஸ்து, அத்தீவை நோக்கி உலகெங்கிலும் இருந்து லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை ஈர்த்தது. இருப்பினும், தற்போதைய காலக்கட்டத்தில் போக்குவரத்துச் சிக்கல்கள், பிராந்திய போட்டி மற்றும் சில பொருட்களுக்கான வரி விலக்குகள் நீக்கப்பட்டது போன்ற புதிய சவால்களால் லங்காவியின் சுற்றுலா வளர்ச்சி சற்று மந்தநிலையைச் சந்தித்துள்ளது. இந்நிலையில், லங்காவி தீவு தனது பழைய செழுமையை மீண்டும் பெற முடியுமா?

துன் மகாதீர் காலத்தில் லங்காவியின் பிரதான ஈர்ப்பாக இருந்தது அதன் வரி இல்லாத ஷாப்பிங் வசதியாகும். ஆனால், அண்மைய காலமாக சில புகையிலைப் பொருட்கள், வாகனங்கள் மற்றும் குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு வரிகள்/கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதால், தாய்லாந்தின் புக்கெட் அல்லது இந்தோனேசியாவின் பாலி தீவுகளுடன் ஒப்பிடுகையில் லங்காவியின் வர்த்தக ஈர்ப்பு சற்று குறைந்துள்ளது.

முக்கிய நிலப் பகுதிகளில் இருந்து இயக்கப்படும் படகு (குநசசல) சேவைகளின் எண்ணிக்கை குறைப்பு மற்றும் விமானக் கட்டண உயர்வு ஆகியவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளன.

அண்டை நாடுகளான தாய்லாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகள் தங்களது தீவுகளை மிக ஆக்ரோஷமாக விளம்பரப்படுத்தி, சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகின்றன. லங்காவி தீவை சர்வதேச அளவில் மீண்டும் ஒரு முதன்மை சுற்றுலா இலக்காக மாற்ற அரசு மற்றும் தனியார் துறைகள் இணைந்து பின்வரும் உத்திகளைச் செயல்படுத்தலாம்:

லங்காவியின் அசல் அடையாளமே அதன் வரிவிலக்கு வர்த்தகம்தான். தற்போதைய மலேசிய கூட்டரசு, லங்காவியின் பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுக்க, கடந்த காலங்களில் நீக்கப்பட்ட வரி சலுகைகளை மறுஆய்வு செய்து, முழுமையான தீர்வையற்ற அந்தஸ்தை மீண்டும் வழங்க வேண்டும். இது வணிகர்களையும் ஆடம்பரப் பொருட்களை வாங்க

விரும்பும் பயணிகளையும் மீண்டும் ஈர்க்கும்.

லங்காவி வெறும் ஷாப்பிங் தலம் மட்டுமல்ல, அது 2007-ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவின் உலகளாவிய ஜியோபார்க் அங்கீகாரம் பெற்ற ஓர் இயற்கை அதிசயமுமாகும். கிளிம் ஜியோபாரஸ்ட் பார்க் (Kilim Geoforest Park) போன்ற இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகளை உலக

அளவில் விளம்பரப்படுத்த வேண்டும். சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாத 'பசுமை சுற்றுலா' மற்றும் கடல்சார் மீன்வளர்ப்பு சார்ந்த சுற்றுலாவை பெரிய அளவில் ஊக்குவிக்கலாம். சுற்றுலாப் பயணிகள் எளிதாகவும் மலிவாகவும் லங்காவியை வந்தடைய வழிவகை செய்ய வேண்டும்.

குறிப்பாக, நிலப் பகுதியில் இருந்து

வரும் ஃபெர்ரி படகு சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு மானியங்களை வழங்கலாம். அனைத்துலக நகரங்களில் இருந்து லங்காவிக்கு நேரடியாக வரும் விமானச் சேவைகளை அதிகரிப்பதன் மூலம் பயணச் செலவைக் குறைக்க முடியும்.

அனைத்துத் தரப்பு சர்வதேசப் பயணிகளையும் கவரும் வகையில் லங்காவியின் கலாச்சாரக் கொள்கைகள் தளர்த்தப்பட வேண்டும். அனைத்துலக இசை விழாக்கள்,

நீர் விளையாட்டுப் போட்டிகள் மற்றும் உலகளாவிய கண்காட்சிகளைத் தொடர்ந்து நடத்துவதன் மூலம் லங்காவியை எப்போதும் சுறுசுறுப்பான ஒரு தீவாக வைத்திருக்க முடியும்.

'விசிட் மலேசியா 2026' (Visit Malaysia 2026) பிரச்சாரத்தின் கீழ், லங்காவியை நவீன இளைய தலைமுறையினருக்கு ஏற்றவாறு சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரப்படுத்த வேண்டும். கட்டுப்படியாகக்கூடிய தங்குமிடங்கள், சாகச விளையாட்டுகள் மற்றும் பாரம்பரிய உணவு முறைகளை மையப்படுத்தி புதிய சுற்றுலாத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

துன் மகாதீர் காட்டிய தொலைநோக்குப் பார்வையால் உருவான லங்காவி தீவு, தற்காலிக சவால்களைச் சந்தித்தாலும் அதன் அசல் இயற்கை அழகையும் தனித்துவத்தையும் இழக்கவில்லை. சரியான உள்கட்டமைப்பு மேம்பாடு, நெகிழ்வான வர்த்தகக் கொள்கைகள் மற்றும் தீவிரமான அனைத்துலக விளம்பர உத்திகள் மூலமாக, லங்காவி தீவு தனது புதிய சவால்களை முறியடித்து, மீண்டும் உலக சுற்றுலா வரைபடத்தில் ஓர் அசைக்க முடியாத சாம்ராஜ்யமாகத் திகழ வேண்டும்.

'நரகமாகும் புலம்பெயர் வாழ்க்கை: கடனிலும் தனிமையிலும் சிக்கும் தொழிலாளர்களின் கண்ணீர்'

உலகளாவிய பொருளாதார வளர்ச்சியின் பின்னணியில், பல நாடுகளின் கட்டுமான மற்றும் சேவைத் துறைகளைத் தாங்கிப் பிடிக்கும் தூண்களாகப் அந்நியத் தொழிலாளர்கள் விளங்குகிறார்கள். ஆனால், அவர்களின் உழைப்பிற்குப் பின்னால் இருக்கும் இருண்ட பக்கங்களை அண்மையில் ஆங்கில நாளேடான நியூ ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் (NST) வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளது. தனிமை, கடன் மற்றும் சுரண்டல் ஆகிய மூன்று கொடிய காரணிகள், புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் மனநலனையும் முற்றிலுமாகச் சிதைத்து வருகின்றன.

அந்நியத் தொழிலாளர்களின் மிகப் பெரிய பலவீனம் அவர்கள் வெளிநாட்டு வேலைக்காக வாங்கும் கடன்கள்தான். மலேசியா போன்ற நாடுகளுக்கு வீட்டு வேலைக்கோ அல்லது தொழிற்சாலை பணிகளுக்கோ வரும் தொழிலாளர்கள், தங்களின் சொந்த ஊர்களில் உள்ள ஏஜெண்டுகளுக்கு ஏகப்பட்ட கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளது.

இதற்காக அவர்கள் தங்களின் நிலங்களை விற்கிறார்கள் அல்லது வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள். வேலை செய்யும் இடத்திற்கு வரும் முன்பே, அவர்கள் பல ஆயிரம் ரிங்கிட் கடனாளியாக மாறுகிறார்கள். இதனால், வேலை செய்யும் இடத்தில் எவ்வளவு கொடுமைகள் நடந்தாலும், வாங்கிய கடனை அடைக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்காக அனைத்துச் சுரண்டல்களையும் சகித்துக் கொண்டு அடிமைகளாக வாழத் தலைப்படுகிறார்கள்.

வெளிநாட்டு மண்ணில் கால் பதித்தவுடன், பல தொழிலாளர்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சுகிறது. ஏஜெண்டுகள் சொன்ன வேலைகளோ அல்லது சம்பளமோ அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பெரும்பாலான நிறுவனங்கள் மற்றும் முதலாளிகள் தொழிலாளர்களின் கடவுச்சீட்டுகளைச் சட்டவிரோதமாகப் பறித்து வைத்துக் கொள்கிறார்கள்.

இதனால் அவர்களால் அந்த இடத்தை விட்டு வெளியேற முடிவதில்லை. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட 10 முதல் 13 மணி நேரம் வரை மிகக் கடுமையான வேலைகள் வாங்கப்படுகின்றன. ஆனால், அதற்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை; பல நேரங்களில் சம்பளம் மாதக் கணக்கில் நிறுத்தி வைக்கப்படுகிறது. போலி விசாக்கள் மற்றும் ஏஜெண்டுகளின் ஏமாற்று வேலைகளால், பல தொழிலாளர்கள் தங்களின் தவற்றைத்

தாண்டியும் சட்டவிரோதக் குடியேறிகளாக மாற்றப்பட்டு, எந்நேரமும் அதிகாரிகளின் கைது நடவடிக்கைக்கு அஞ்சி வாழ்கிறார்கள்.

அந்நியத் தொழிலாளர்கள், குறிப்பாக வீட்டு வேலை செய்யும் பெண்கள், வெளிநாடுகளில் கடுமையான சமூகத் தனிமையை எதிர்கொள்கிறார்கள். புதிய மொழி, கலாச்சாரம் மற்றும் அந்நிய சூழல் அவர்களைப் பயமுறுத்துகிறது. தங்களின் குடும்பத்தினருடன் பேசுவதற்குக் கூட தொலைபேசி வசதிகள் மறுக்கப்படும் போது, அவர்கள் கடுமையான மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். தங்களுக்கு நடக்கும் கொடுமைகளை யாரிடம் சொல்வது என்று தெரியாமலும், சட்ட உதவி பெற முடியாமலும் தவிக்கும் போது, இந்தத் தனிமை அவர்களின் மனநலனை முற்றிலுமாக உடைத்து விடுகிறது.

மலேசியாவின் பொருளாதாரம் இவர்களின் உழைப்பில்தான் இயங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை வல்லுநர்கள் கூட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிரான இத்தகைய முறையான சுரண்டல்கள் குறித்துப் பலமுறை கவலை தெரிவித்துள்ளனர்.

வெறும் சட்டங்களை மட்டும் இயற்றாமல், மனிதநேய அடிப்படையிலும், தொழிலாளர் நலச் சட்டங்களின்

மூலமும் இவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஏஜெண்டுகளின் கட்டணக் கொள்ளையைத் தடுத்து, வெளிப்படையான வேலை வாய்ப்பு முறையை உருவாக்குவதே இதற்கு நிரந்தரத் தீர்வாக அமையும். மலேசியாவில்

இவ்வாறான சுரண்டல்களுக்கு ஆளாகும் தொழிலாளர்கள் உதவி பெற, தெனகனித்தா (Tenaganita) அமைப்பை +6012-335-0515 அல்லது +6012-339-5311 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தங்களின் பாதுகாப்புக்கான ஆலோசனைகளைப் பெறலாம்.

ஆபத்துகளின் உச்சம்: மலேசிய வெட்டு மர லோரி ஓட்டுநர்களின் சவால்கள்

மலேசியாவின் அடர்ந்த காடுகளில், பிரம்மாண்டமான வெட்டு மரங்களை ஏற்றி, ஆபத்தான பாதைகளில் பயணிக்கும் லோரி ஓட்டுநர்களின் வாழ்க்கை ஒவ்வொரு நாளும் மரண விளிம்பில் நடக்கும் போராட்டமாகும். நாட்டின் பொருளாதாரத்திற்கு இவர்களின் உழைப்பு இன்றியமையாததாக இருந்தாலும், காடுகளுக்குள் இவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் சாதாரண மனிதர்களால் கற்பனை செய்ய முடியாதவை. மலேசியாவில் இத்தகைய வெட்டு மர நடவடிக்கைகள் முதன்மையாக சபா, சரவாக் ஆகிய கிழக்கு மலேசியப் பகுதிகளிலும், தீபகற்ப மலேசியாவின் பகாங், பேராக் போன்ற அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் அதிக அளவில் நடைபெறுகின்றன.

காடுகளுக்குள் வெட்டப்பட்ட கனரக வெட்டு மரங்களை லோரியில் ஏற்றுவதே இவர்களுக்கான முதல் மற்றும் மிக முக்கியமான சவாலாகத் தொடங்குகிறது. எந்தவொரு நவீன பாதுகாப்பு வசதிகளும் இல்லாத காட்டுப் பகுதிகளில், ராட்சத வெட்டு மரங்களின் எடை மற்றும் நீளத்தை துல்லியமாகக் கணித்து லோரியின் பின்புறத்தில் ஏற்ற வேண்டும். லாரியின் ஒரு பக்கமாக எடை சற்றே கூடினாலும் அல்லது சமநிலை தவறினாலும் வாகனம் அப்படியே தலைகீழாகக் கவிழ்ந்துவிடும். குறிப்பாக, மலேசியாவின் மழைக் காலங்களில் வெட்டு மரங்கள் ஈரப்பதத்தால் வழுக்கும் தன்மையைப் பெறும்போது, அவற்றை லாரியில் அடுக்கும் பணி பல மடங்கு ஆபத்தானதாக மாறுகிறது.

அவ்வாறு அடுக்கப்பட்ட வெட்டு மரங்கள் பயணத்தின் போது நகராமல் இருக்க, அவற்றை இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கும் பணி அடுத்த கட்ட அச்சுறுத்தலாகும். வெட்டு மரங்களை இறுக்கமாகக் கட்டும்போது ஏற்படும் அதிக அழுத்தம் காரணமாக, சங்கிலிகள் திடீரென அறுந்து ஓட்டுநர்களின் மீது பாயும் அபாயம் எப்போதும் உண்டு. மேலும், சங்கிலியைப் பூட்டும் அந்த நூலிழை நேரத்தில் வெட்டு மரங்கள் லேசாக நகர்ந்தால் கூட, அதற்கு நடுவில் ஓட்டுநர்களின் கைகளோ அல்லது உடலோ சிக்கி நசுங்கி உயிரிழக்கும் கொடூரமான விபத்துகள் நடக்கக்கூடும்.

இத்தனை ஆபத்துகளையும் தாண்டி வெட்டு மரங்களை ஏற்றிய பிறகு, காடுகளிலிருந்து வெளியேறும் பயணம் ஒரு தற்கொலை முயற்சிக்கு ஒப்பானதாகும். செங்குத்தான மலைகள், ஆழமான பள்ளங்கள், மற்றும் சேறும் சகதியுமான முரட்டுப்பாதைகளில் பல டன் எடையுள்ள லாரிகளை ஓட்டுவதற்கு அசாத்திய துணிச்சலும் திறமையும் தேவைப்படுகிறது. இத்தகைய மலைப்பாதைகளில் கீழ்நோக்கி இறங்கும்போது தொடர்ச்சியாக பிரேக் பயன்படுத்துவதால், பிரேக் பேட்கள் அதிக சூடாகி செயலிழந்து வாகனம் கட்டுப்பாட்டை இழந்து பாதாளத்தில் விழும் ஆபத்து ஓட்டுநர்களை எப்போதும் நிழலாகத் தொடர்கிறது.

இவற்றுக்கெல்லாம் மேலாக,

ஓட்டுநர்களின் சராசரி மாதச் சம்பளம் தோராயமாக 2,500 ரிங்கிட் முதல் 4,000 ரிங்கிட் வரை மட்டுமே இருக்கும். இவர்கள் மேற்கொள்ளும் பயணங்களின் எண்ணிக்கை (Trip Allowance) மற்றும் கூடுதல் வேலை நேரத்தை (Overtime)

காடுகளுக்குள் அவர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவல நிலையும் ஏற்படுகிறது. மரம் வெட்டும் இயந்திரங்கள் பழுதடைதல், கடுமையான மழை அல்லது நிர்வாகக் காரணங்களால் திட்டமிட்டபடி வெட்டு மரங்களை ஏற்ற முடியாமல், ஓட்டுநர்கள் காடுகளுக்குள்ளேயே பல நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கும்.

இத்தகைய சூழ்நிலைகளில், அவர்கள் நாட்கணக்கில் வீட்டிற்குச் செல்ல முடியாமல் காடுகளிலேயே தங்கிவிட நேரிடுகிறது. போதிய உணவு, தூய்மையான தண்ணீர் மற்றும் மருத்துவ வசதிகள் இல்லாத நிலையில், மலேசியக் காடுகளில் வாழும் யானைகள், புலிகள், கருஞ்சிறுத்தைகள் மற்றும் விஷப் பாம்புகள் போன்ற கொடிய விலங்குகளின் மிரட்டல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் நடுவே அவர்கள் இரவைக் கழிக்க வேண்டியுள்ளது.

இந்த மிக மோசமான மற்றும் அபாயகரமான வேலைக்கு இவர்களின் உழைப்பு நேரம் குறிப்பிட்ட வரையறைக்கு உட்பட்டது அல்ல. 24 மணி நேரமும் எந்த நேரத்திலும் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இவர்களுக்கு உண்டு. விடியற்காலை 3 மணிக்கே எழுந்து லாரிகளை இயக்க வேண்டிய சூழல் ஏற்படுவதுடன், தூக்கமின்மை இவர்களின் உடல்நலனைப் பெரிதும் பாதிக்கிறது. இவ்வளவு பெரிய உயிராபத்துகளுக்கு இடையே பணியாற்றும் இந்த பொறுத்து இந்த ஊதியம் சற்று மாறுபடலாம்.

ஒவ்வொரு முறையும் காட்டிற்குள் செல்லும்போது இதுவே தங்களின் இறுதிப் பயணமாக மாறிவிடுமோ என்ற அச்சத்தோடு, குடும்பத்திற்காகத் துணிச்சலாக வாகனங்களை ஓட்டும் மலேசிய வெட்டு மர லோரி ஓட்டுநர்களின் வாழ்க்கை சவால்களும் தியாகங்களும் நிறைந்த ஒரு நிஜப் போராட்டமாகும்.

மூழ்கும் ஜாவா தீவு: மனித பேராசையும் புவி வெப்பமயமாதலும் தந்த பேராபத்து

உலகில் உள்ள தீவுகளிலேயே மிக அதிக மக்கள் தொகையைக் கொண்ட தீவாக இந்தோனேசியாவின் 'ஜாவா' தீவு விளங்குகிறது. சுமார் 15 கோடிக்கும் அதிகமான மக்கள் வாழும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிலப்பரப்பு, தற்போது உலக வரைபடத்திலிருந்து மெல்ல மெல்ல மறைந்து வரும் மாபெரும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. புவி வெப்பமயமாதலின் விளைவுகள் ஒருபுறம் இருக்க, மனிதர்களின் தற்காலிகச் சுயநல செயல்பாடுகளால் ஜாவா தீவும் அதன் கடலோரப் பெருநகரங்களும் அடுத்த சில தசாப்தங்களில் கடலுக்குள் மூழ்கும் பேராபத்தில் சிக்கியுள்ளன. ஜாவா தீவு கடலுக்குள் மூழ்குவதற்குப் பின்னால் நிலம் அமிழ்தல் மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகிய இரட்டை ஆபத்துகள் மறைந்துள்ளன. புவி வெப்பமயமாதலால் பனிப்பாறைகள் உருகி, உலகளவில் கடல் மட்டம் ஆண்டுக்குச் சராசரியாக சில மில்லிமீட்டர்கள் உயர்ந்து வருவது ஒரு பொதுவான காரணியாகும். ஆனால், அதைவிட அதிவேகமாக ஜாவா தீவின் நிலப்பரப்பு ஆண்டுக்கு 1 முதல் 15 சென்டிமீட்டர் வரை பூமிக்குள் உள்வாங்கிக் கொண்டே செல்வதுதான் மிக விபரீதமானதாக மாறியுள்ளது.

இந்த நிலம் அமிழ்தல் பேராபத்திற்கு மனிதர்களால் விளைந்த விபரீதங்களே முக்கியக் காரணமாகும். ஜாவா தீவிலும், குறிப்பாக அதன் தற்போதைய தலைநகரான ஜகார்த்தாவிலும் வாழும் கோடிக்கணக்கான மக்களுக்குத் தூய்மையான குழாய் நீர் குடிப்பதற்குத் தாராளமாகக் கிடைப்பதில்லை. இதன் விளைவாக, வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகள் தங்களின் அன்றாடத் தேவைக்காகச் சட்டவிரோத ஆழ்துளைக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரை அசுரத்தனமாக உறிஞ்சுகின்றன. பூமிக்கு அடியில் இருக்கும் நீர் முற்றிலும் காலியாவதால், அங்கிருக்கும் மென்மையான வண்டல் மண் அடுக்குகள் சுருங்கி இறுக்கமடைந்து, நிலம் அப்படியே கீழ்நோக்கி அமிழ்கிறது.

இதன் காரணமாக, ஜகார்த்தா இன்று உலகிலேயே மிக வேகமாக மூழ்கி வரும் பெருநகரமாக மாறியுள்ளது. விஞ்ஞானிகளின் எச்சரிக்கைப்படி, வருகிற 2050-ஆம் ஆண்டிற்குள் வட ஜகார்த்தாவின் 95 சதவீதப் பகுதிகள் முற்றிலும் கடலுக்குள் மூழ்கிவிடும் அபாயம் உள்ளது. ஏற்கனவே பல கடலோரப் பகுதிகளில் வீடுகளின் முதல் தளம் வரை கடல் நீர் புகுந்து விட்டதால், மக்கள் தங்களின் வீடுகளைச் சிமெண்ட் போட்டு உயர்த்தி, ஒருவித "நீர்நிலை வாழ் மக்கள்" போன்ற அவல வாழ்க்கையை வாழத் தொடங்கி விட்டனர். செமராங் மற்றும் பெகலோங்கன் போன்ற வட ஜாவா கடலோர நகரங்களில் பல ஏக்கர் விவசாய நிலங்களும், பூர்வகுடி கிராமங்களும் ஏற்கனவே நிரந்தரமாகக் கடலாக மாறி விட்டன.

இந்த விபரீதத்தை உணர்ந்த இந்தோனேசிய அரசாங்கம், கோடிக்கணக்கான மக்களின் உயிரைக் காக்க சில அதிரடிப் பெருந்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஜகார்த்தாவை இனி முழுமையாகக் காப்பாற்ற முடியாது என்பதை உணர்ந்த அரசு, தனது நாட்டின் புதிய தலைநகராக போர்னியோ தீவில் உள்ள "நுசான்தாரா" என்ற அதிநவீன பசுமைத் நகரத்தை உருவாக்கி, அங்குத் தனது நிர்வாகங்களை வேகமாக மாற்றி வருகிறது. இவற்றுடன், ஜாவா தீவின் வடக்குக் கடற்கரையைப் பாதுகாக்கப் பில்லியன் டாலர் செலவில் பிரம்மாண்டமான கான்கிரீட் கடற்சுவர்களைக் கட்டும் பணிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது.

ஜாவா தீவின் தற்போதைய நிலை, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் இயற்கை விடுத்துள்ள ஒரு கடுமையான எச்சரிக்கையாகும். இயற்கை வளங்களை அளவுக்கு அதிகமாகச் சுரண்டுவதும், புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்தாமல் இருப்பதும் மனித நாகரிகத்தையே எப்படி அழிக்கும் என்பதற்குச் சான்றாக ஜாவா தீவு மாறி வருகிறது. உலக நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பில் உடனடி கவனம் செலுத்தாவிடில், எதிர்காலத்தில் பல தீவுகளின் நிலை இதுவாகத்தான் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

"மலேசிய மத்திய வங்கி அதிகப் பணத்தை அச்சிட்டு, அதை அப்படியே மக்களுக்கு நேரடியாகக் கொடுத்து உதவலாம்."- கடந்த 2020-ஆம் ஆண்டு கோவிட்-19 பொதுமுடக்கத்தால் நாட்டின் பொருளாதாரம் சரிவைச் சந்தித்த போது, அப்போதைய இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை துணை அமைச்சர் வான் அகமத் ஃபைசல் 'பி.எஃப்.எம்' வானொலிக்கு அளித்த இந்த நேர்காணல் மலேசியாவில் பெரும் புயலையே கிளப்பியது. பொருளாதாரத்தின் அடிப்படை விதிகளைக் கூட அறியாமல் ஒரு நாட்டின் துணை அமைச்சர் இப்படிப் பேசலாமா என்று நாடாளுமன்றத்திலும் பொதுவெளியிலும் அவர் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளானார். இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானியர்கள் அச்சிட்டுத் தள்ளிய 'வாழைப்பழப் பணம்' மதிப்பு இல்லாமல் போன வரலாற்றுப் பேரழிவைச் சுட்டிக் காட்டி நிபுணர்கள் இவரைக் கடுமையாகச் சாடினர். இந்த சர்ச்சை மலேசியர்கள் மத்தியில் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்பியது. உண்மையிலேயே ஒரு நாடு தனக்குத் தேவையான பண நோட்டுகளைச் சொந்தமாக எவ்வளவு வேண்டுமானாலும் அச்சிட முடியுமா? அதற்கான விதிமுறைகள் என்ன?

பணத்தை அச்சிடும் அதிகாரம்: வான் அகமத் ஃபைசலின் சர்ச்சையும் பொருளாதாரத்தின் நிஜ விதிகளும்

ஒரு சுதந்திரமான, ஹிறையாண்மை கொண்ட நாடு தனது சொந்தப் பண நோட்டுகளை அச்சிட முழு சட்டபூர்வ அணிகாரம் பெற்றுள்ளது என்பணில் மாற்றுக் கருத்தில்லை. அந்தந்த நாட்டின் மத்ணிய வங்கிகளே ஹிந்த அணிகாரத்தைக் கொண்டுள்ளன. மலேஞியாஜீல் 'பேங்க் நெகாரா மலேஞியா' ஹிந்த அச்ஞிடும் பதியை மேற்கொள்கிறது. ஹிருப்நினும், ஒரு நாடு பினைத்த மாத்ணிரத்ணில் எல்லையற்ற தொகையை அச்ஞிட முடியாது.

அவ்வாறு செய்தால் அது 'பணனிக்கம்' என்ற பெரும் பொருளாதாரப் பாதாளத்ணிற்கு நாட்டை ஹிட்டுச் செல்லும். மத்ணிய வங்கிகள் புணிய பண நோட்டுகளை அச்ஞிடுவதற்குப் நின்னால் லீகத் தெஹீவான பொருளாதாரக் கோட்பாடுகளும் நெறிமுறைகளும் உள்ளன. அவை முக்கியமாக மூன்று காரதிகஹீன் அடிப்படைஹீல் ஹியங்குகின்றன.

முதலாவதாக, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்ணி ஆகும். ஒரு நாட்டில் உற்பத்ணி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகஹீன் ஒட்டுமொத்த மணிப்பை வைத்தே புணிய பணம் அச்ஞிடப்படுகிறது. சந்தைஹீல் பொருட்கஹீன் உற்பத்ணி அணிகளீக்காமல், வெறும் பணப்புழக்கம் மட்டும் அணிகமானால் பணத்ணின் மணிப்பு ணிழ்ந்துஜீடும்.

ஹிரண்டாவதாக, தங்கம் மற்றும் அந்பியச் செலாவதி ஹிருப்பு ஆகும். முன்னாட்கஹீல் தங்கம் எந்த அளஷிக்கு அரஞிடம் உள்ளதோ, அந்த மணிப்புக்கே பணம் அச்ஞிடப்பட்டது. தற்போது, தங்கம் மட்டுலீன்றி அமெளீக்க டாலர் போன்ற வலுவான அந்பியச் செலாவதி ஹிருப்பு மற்றும் அரசாங்கப் பத்ணிரங்கஹீன் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே புணிய நோட்டுகள் வெஹீழீடப்படுகின்றன.

மூன்றாவதாக, பழைய நோட்டுகஹீன் சுழற்ஞியைக் கூறலாம். புழக்கத்ணில் ஹிருந்து கிஷீந்து, நைந்து போகும் பழைய பண நோட்டுகளைத் ணிரும்பப் பெற்று, அதற்கு ஈடாக அதே மணிப்நில் புணிய நோட்டுகளை மத்ணிய வங்கிகள் அச்ஞிடுகின்றன.

பொருளாதார ஜீணிகளுக்கு மாறாக, அரஞியல் நெருக்கடிகளுக்காகத் தன்வீச்சையாகப் பணத்தை அச்ஞிட்டுத் தள்ஹீய நாடுகள் உலக வரைபடத்ணில் ஞிதைந்து போஜிள்ளன. ஹிதற்குச் ஞிறந்த உதாரணம் யும்பாப்வே மற்றும் வெவீசுலா. யும்பாப்வே நாடு நில்ஸீயன் கணக்கில் பண நோட்டுகளை அச்ஞிட்டதால், அந்நாட்டுப் பணத்ணின் மணிப்பு பூஜ்யுயமானது. ஒரு ரொட்டி வாங்குவதற்குக் கூட மக்கள் மூட்டை மூட்டையாகப் பணத்தை வண்டிஹீல் அள்ஹீச் செல்ல வேண்டிய அவல பிலை ஏற்பட்டது. ஹிறுணிஹீல் அந்நாடு தனது சொந்தப் நாணயத்தையே கைஜீட நேர்ந்தது.

மேலும், பண நோட்டுகளை அச்ஞிடுவது என்பது சாதாரணப் பதி அல்ல. கள்ளநோட்டுகளைத் தஜீர்க்கும் வகைஹீல் உலகத்தரம் வாய்ந்த பாதுகாப்பு அம்சங்கள், நிரத்ணியேகமை மற்றும் பாஸீமர் போன்ற ஞிறப்புப் பொருட்கள் ஹிதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மலேஞியா, ஹிந்ணியா, அமெளீக்கா போன்ற நாடுகள் ஹிதற்கான அணிநனின அச்சகங்களைச் சொந்தமாக வைத்துள்ளன.

ஆனால், பல ஞிறிய நாடுகள் தங்கஹீன் பணத்தை அச்ஞிடும் உளீமத்தை ஹிங்கிலாந்து, ஜெர்மவீ போன்ற நாடுகஹீல் உள்ள அனைத்துலகப் பாதுகாப்பு அச்ஞிடும் பிறுவனங்கஹீடம் ஒப்பந்த அடிப்படைஹீல் ஒப்படைக்கின்றன. எனவே, வான் அகமத் ஃபைசல் போன்ற அரஞியல்வாணிகள் எஹீமையாக முன்வைத்த "பணத்தை அச்ஞிட்டுப் பகிர்ந்தஹீப்பது"

என்ற யோசனை, நடைமுறைஹீல் ஒரு நாட்டின் பொருளாதாரத்தையே ஒட்டுமொத்தமாக அஷீத்துஜீடும் பேராபத்தைக் கொண்டது. சுருக்கமாகக் கூறின், ஒரு நாடு சொந்தமாகப் பணத்தை அச்ஞிட முடிஜிம்; ஆனால், அதை நாட்டின் உற்பத்ணித் ணிறனுக்கும் பொருளாதார வளர்ச்ஞிக்கும் ஏற்ப மட்டுமே செய்ய வேண்டும் என்பதே உலகப் பொருளாதாரத்ணின் மாறா ஜீணியாகும்.

சிறைக்குப் பின் சீரான வாழ்வு:
கைதிகளுக்குப் புது வாழ்வளிக்கும்
மலேசிய சிறைத்துறை

மலேசிய சிறைச்சாலைத் துறையின் கீழ் இயங்கும் 'குடியிருப்பாளர்கள் மறு ஒருங்கிணைப்பு மையங்கள்' (PRP), சிறைவாசத்திற்குப் பிறகு கைதிகள் சமுதாயத்தில் பாகுபாடின்றி ஒரு புதிய நல்வாழ்வைத் தொடங்குவதற்கான உன்னதமான மாற்றுத் தளமாகச் செயல்பட்டு வருகின்றன. பொதுவாகச் சிறைத்தண்டனை முடிந்து வெளிவரும் நபர்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளும் சவால்களையும் ஒவ்வாமைகளையும் போக்கி, அவர்களை மனரீதியாகவும் தொழில்ரீதியாகவும் தயார்படுத்துவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.
கைதிகள் தங்களின் கடந்த காலத் தவறுகளை உணர்ந்து, சுயசார்புடையவர்களாக மாறுவதற்கும், சமுதாயத்தோடு இணையும் திறனை வளர்ப்பதற்கும் வழங்கப்படும் ஒரு மிகச் சிறந்த இரண்டாம் வாய்ப்பாக இத்திட்டம் உலகளாவிய ரீதியில் பாராட்டுகளைப் பெற்றுள்ளது.

இதன் ஒரு பகுதியாக, ஜோகூர் மாநிலத்தின் குளுவாங் மறுவாழ்வு மையத்தில் தற்போது 480 கைதிகள் தீவிர கண்காணிப்பின் கீழ் முறையான தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் தங்களின் தண்டனைக் காலம் முடிந்து விடுதலையாகும் தருவாயில் உள்ள 200 கைதிகள், 'கைதிகள் தொழில்முறை மறு ஒருங்கிணைப்புத் திட்டத்தில்' (PRPI) நேரடியாக ஈடுபடுத்தப்பட்டு, நேரடி வேலை வாய்ப்பு அனுபவத்தைப் பெற்று வருகின்றனர்.

இங்குள்ள கைதிகளுக்கு வெறும் தத்துவார்த்தக் கல்வியாக இல்லாமல், தங்களின் வாழ்வாதாரத்தை உடனடியாக உயர்த்தக்கூடிய பல்வேறு செயல்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக, நவீன விவசாய முறைகளின் கீழ் பப்பாளி, வெள்ளரி, கீரை, வெண்டைக்காய், வெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற பயிர்களைப் பயிரிடுதல், முறையான கால்நடை வளர்ப்பு மற்றும் சந்தையில் அதிக தேவையுள்ள சமையல் கலை (கேக், டோனட்ஸ், பீட்சா தயாரித்தல்) போன்ற துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

இவை தவிர, தொழில்நுட்பத் துறையில் ஆர்வம் கொண்ட கைதிகளுக்கு ஏர்-கண்டிஷனர் பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் அடிப்படை மின்சாரக் கல்வி போன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அனுபவமிக்க வல்லுநர்களால் கற்பிக்கப்படுகின்றன. இந்தத் தொழிற்பயிற்சிகள் அனைத்தும் கைதிகள் விடுதலையான பிறகு தனியார் நிறுவனங்களில் எளிதாக வேலை வாய்ப்பைப் பெறவும், சொந்தமாகச் சுயதொழில் தொடங்கி முதலீடுகளை ஈட்டவும், தங்களின் எதிர்கால நல்வாழ்விற்காகச் சொந்தமாகச் சேமிப்பை உருவாக்கவும் பெரிதும் உதவுகின்றன.

இந்த உன்னத நோக்கத்திற்குத் தோள் கொடுக்கும் வகையில், ஜோகூரில் உள்ள யோங் பெங், ஆயர் ஈத்தாம், ஸ்ரீ காடிங் மற்றும் குளுவாங் ஆகிய பகுதிகளில் உள்ள ஐந்து முன்னணி தனியார் தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்திற்குத் தேவையான வேலை வாய்ப்புச் சந்தையை உருவாக்கி, முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றன.

இருப்பினும், இத்தகைய வெளி உலகப் பணிகளுக்குக் கைதிகளைத் தேர்ந்தெடுப்பதில் சிறைச்சாலைத் துறை மிகக் கடுமையான விதிமுறைகளையும், பாதுகாப்புப் பரிசோதனைகளையும் கையாள்கிறது. தீவிர ஒழுக்கக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள், நன்னடத்தை சான்றுகள் மற்றும் ஒரு மாத கால தொடர் கண்காணிப்பிற்குப் பிறகே தகுதியான கைதிகள் வெளி இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பணி புரியும் காலங்களிலும், பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் கைதிகளின் ஒழுக்கத்தை உறுதி செய்ய சிறைத்துறை அதிகாரிகள் அவர்களைத் தொடர்ந்து 24 மணி நேரமும் கண்காணித்து வருகின்றனர். தொழில்நுட்பப்

பயிற்சிகள் மட்டுமின்றி, கைதிகளின் மன அழுத்தத்தைக் குறைத்து அவர்களைச் சமுதாயத்தோடு பிணைக்கக் குடும்ப உறவுகளின் ஆதரவு மிக அவசியமாகிறது.

இதனை உணர்ந்த சிறைத்துறை பெருநாட்களின் போது கைதிகள் தங்களின் பெற்றோர்கள், மனைவிகள் மற்றும் குழந்தைகளை நேரில் சந்தித்து அன்பு பாராட்டவும், மையங்களிலேயே கூட்டு வழிபாடுகளில் ஈடுபட்டு ஆன்மீக அமைதியைப் பெறவும் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்கிறது.

இந்த ஒட்டுமொத்த கூட்டு முயற்சியானது, கைதிகளைத் தங்களின் குடும்பப் பொருளாதாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் பொறுப்பான குடிமக்களாக மறுவடிவமைப்பு செய்வதுடன், நாட்டில் குற்றச் செயல்களின் எண்ணிக்கையைக் குறைத்து, ஒரு பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதிலும் பெரும் பங்களிப்பை வழங்கி வருகிறது.

இயற்கையின் சங்கமம்:

பிரேசர் மலை அனைத்துலக பறவைகள் திருவிழா

பிரேசர் மலை அனைத்துலக பறவைகள் பந்தயம் என்பது மலேசியாவின் பகாங் மாநிலத்தில் உள்ள ரவூப் மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் மிகக் கோலாகலமாக நடைபெறும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுச்சூழல் பெருவிழாவாகும். 1988 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் இந்த விழா, மலேசியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப் பெரிய பறவை நோக்கல் நிகழ்வாகக் கருதப்படுகிறது.

பசுமை மாறா அடர்ந்த காடுகள், வருடிச் செல்லும் பனிமூட்டம், இதமான குளிர் காலநிலை என இயற்கை அன்னையின் புகலிடமாகத் திகழ்கிறது பிரேசர் மலை. இந்த மலைப்பகுதி வெறும் சுற்றுலாத் தலம் மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள பறவை ஆர்வலர்களின் சொர்க்கபுரியும் ஆகும். இங்கு ஆண்டுதோறும் பகாங் சுற்றுலாத்துறையால் நடத்தப்படும் "அனைத்துலக பறவைகள் பந்தயம்", பறவைகளின் உலகிற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஓர் உன்னத நிகழ்வாகும்.

இந்த விழாவின் முக்கிய நோக்கம் பிரேசர் மலையை ஒரு பாதுகாக்கப்பட்ட பறவைகள் சரணாலயமாக உலகிற்கு அடையாளப்படுத்துவதும், இயற்கை வளங்களைப் பாதுகாப்பதுமே ஆகும். மேலும், இது சுற்றுச்சூழல் சுற்றுலாவுக்கு பெரும் பங்களிப்பை வழங்குகிறது.

வேகமாக ஓடும் பந்தயங்களுக்கு மத்தியில், இந்தப் பந்தயம் முழுக்க முழுக்க அறிவு, பொறுமை மற்றும் கூர்நோக்கல் திறனை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக ஒரு குழுவிற்கு மூன்று பேர் வீதம் பங்கேற்பார்கள். அவர்கள் 24 மணி நேரக் காலக்கெடுவிற்குள் பிரேசர் மலைக் காடுகளில் உலாவி, அங்குள்ள பறவைகளைக் கண்டறிய வேண்டும்.



தங்களின் அதிநவீன கேமராக்கள், தொலைநோக்கிகள் மற்றும் பறவைகளின் தனித்துவமான குரல் ஒலிகளைக் கொண்டு அவற்றின் இனத்தைக் கண்டறிந்து பதிவு செய்ய வேண்டும். இப்போட்டிகள் அனுபவம் வாய்ந்தவர்கள், புதியவர்கள் மற்றும் மாணவர்கள் என மூன்று பிரிவுகளில் பிரிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன.

பிரேசர் மலையில் சுமார் 250-க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்த பறவை இனங்கள் வாழ்கின்றன. இந்த விழாவின் போது இப்பகுதிக்கே உரிய 'சில்வர்-இயர்ட் மெசியா', ரெட்-ஹெடட் ட்ரோகோன் மற்றும் பல்வேறு வகையான புல்புல், ஃபிளைகேட்சர் பறவைகளைக் காண நாடு முழுவதும் உள்ள பறவைகளை நேசிப்பவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் திரள்கின்றனர்.

இந்நிகழ்வில் மலேசியா மட்டுமின்றி சிங்கப்பூர், இந்தியா, நேப்பாளம், தாய்லாந்து, வியட்நாம், ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குழுக்கள் பங்கேற்கின்றன.

பறவைகள் பந்தயத்துடன் சேர்த்து, புகைப்படக் கலைஞர்கள் தங்களின் கேமரா லென்ஸ்கள் மூலம் இயற்கையின் அழகைப் படம் பிடிக்கும் பறவை நிழற்படப் போட்டியும் இங்கு நடைபெறுகிறது. அத்துடன், இயற்கை ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இணைந்து பறவை பாதுகாப்பு குறித்து உரையாடும் சுற்றுச்சூழல் கண்காட்சிகள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான விழிப்புணர்வு முகாம்களும் நடத்தப்படுகின்றன. கேமராக்களின் 'கிளிக்' சத்தங்களுக்கும், தொலைநோக்கிகளின் தேடல்களுக்கும் மத்தியில் பிரேசர் மலையே பறவைகளின் கீதங்களால் இசைமயமாய் மாறும் இந்த விழா ஓர் அரிய நிகழ்வாகும். காடுகளையும் பறவைகளையும் நேசிப்பவர்கள் தங்களின் வாழ்நாளில் ஒருமுறையாவது காண வேண்டிய இந்தப் பெருவிழா, இயற்கையோடு இணைந்து வாழ மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கும் உன்னதப் பாடமாகும்!



மலேசியாவின் நெங்கிரி குகைகளில் வெளிப்பட்ட வரலாற்றுப் பொக்கிஷம்

மலேசிய வரலாற்றின் காலக் கணக்கீட்டை முற்றிலும் மாற்றி எழுதும் வகையிலான ஒரு மாபெரும் தொல்பொருள் கண்டுபிடிப்பு அண்மையில் நிகழ்ந்துள்ளது. மலேசியத் தேசியப் பல்கலைக்கழகத்தின் மூத்த தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஜ்லிஸ்காண்டர் ரம்லி தலைமையிலான குழுவினர், கிளந்தான் மாநிலத்தின் நெங்கிரி பள்ளத்தாக்கில் இந்த வரலாற்றுப் பொக்கிஷங்களை வெளிக்கொண்டு வந்துள்ளனர். அணை கட்டுமானப் பணிகள் தொடங்குவதற்கு முன்பாக, தண்ணீரில் மூழ்கவிருந்த குகைகளில் இருந்து காலத்தின் விசித்திரமான உண்மைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன.

நெங்கிரி பள்ளத்தாக்கில் மலேசிய அரசு ஒரு பிரம்மாண்டமான நீர் மின்சார அணைத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இந்த அணை முழுமையாகக் கட்டி முடிக்கப்படும் போது, அப்பகுதியில் உள்ள 13 வரலாற்றுச் சிறப்புமிக்க சுண்ணாம்புக் குகைகள் முற்றிலும் தண்ணீருக்கு அடியில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டது. நம் முன்னோர்களின் தடயங்கள் எப்போதும் போலியாக அழிந்துவிடக்கூடாது என்பதற்காக, மலேசிய தொல்பொருள் துறையினர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் குழு இணைந்து, அங்கு ஒரு மீட்பு அகழ்வாராய்ச்சியை மிக அவசரமாக மேற்கொண்டனர். அப்போதுதான், யாரும் எதிர்பாராத வகையில் பூமியின் ஆழத்திலிருந்து கடந்த காலம் விழித்துக் கொண்டது.

நெங்கிரி பள்ளத்தாக்கின் 13 குகைகளில் நடத்தப்பட்ட தீவிரத் தேடலில், மொத்தம் 16 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. இதில் மிகவும் ஆச்சரியமளிக்கும் விஷயம் என்னவென்றால், 'குவா கெலிடுங் கெச்சில்' என்ற குகையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு முழுமையான மனித எலும்புக்கூடு சுமார் 14,000 முதல் 16,000 ஆண்டுகள் வரை பழமையானது என்பது கார்பன் பரிசோதனையில் உறுதியானது. இது மலேசியாவிலும், ஒட்டுமொத்த தென்கிழக்கு ஆசியாவிலும் இதுவரை கண்டறியப்பட்ட மிக முழுமையான மற்றும் பழமையான மனித எச்சங்களில் ஒன்றாகும்.

1

2

இந்த எலும்புக்கூடுகள் புதைக்கப்பட்டிருந்த விதம் ஆராய்ச்சியாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. கண்டெடுக்கப்பட்ட 16 எலும்புக்கூடுகளில் 15 உடல்கள் கருப்பைக்குள் குழந்தை சுருண்டு இருக்கும் நிலையில் புதைக்கப்பட்டிருந்தன. இது புதிய கற்காலத்திற்கு முந்தைய காலத்து குகை மனிதர்களின் பாரம்பரிய புதைப்பு முறையாகும். ஆனால், ஒரே ஓர் எலும்புக்கூடு மட்டும் நேராக நீட்டப்பட்ட நிலையில் புதைக்கப்பட்டிருந்தது. இது சுமார் 6,000 ஆண்டுகள் பழமையான புதிய கற்காலத்தைச் சேர்ந்தது என்பதால், ஒரே குகைப் பகுதியை வெவ்வேறு காலகட்ட மனிதர்கள் தங்களின் இறுதிச் சடங்குகளுக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

மனித எச்சங்கள் மட்டுமின்றி, அந்தக் குகை மனிதர்கள் தினசரி பயன்படுத்திய மற்றும் தங்களின் சடங்குகளுக்குப் பயன்படுத்திய 71,289 வரலாற்றுத் தொல்பொருட்களை ஆராய்ச்சியாளர்கள் மீட்டுள்ளனர். அவர்கள் மிகக் கூர்மையாகச் செதுக்கிப் பயன்படுத்திய கற்கருவிகள், பழங்கால மண்பாண்ட துண்டுகள், கல் ஆபரணங்கள் மற்றும் பளபளக்கும் படிகங்கள் ஆகியவை இதில் அடங்கும். மேலும், இறந்த உடல்களுடன் 'ரெட் ஓக்ரே' எனப்படும் ஒருவகை சிவப்பு கனிமம் மற்றும் கற்கருவிகளைச் சேர்த்துப் புதைத்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம், 16,000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதர்களுக்கு மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை குறித்த சில நம்பிக்கைகள் அல்லது மதச் சடங்குகள் இருந்திருப்பது நிரூபணமாகியுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு வெறும் மலேசியாவிற்கு மட்டுமானது அல்ல; ஒட்டுமொத்த தென்கிழக்கு ஆசியாவின் ஆரம்பகால மனிதர்களின் இடம்பெயர்வு, அவர்களின் வாழ்க்கை முறை, கலாச்சார மாற்றங்கள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை உலகிற்கு விளக்குவதில் இந்த கண்டுபிடிப்பு மிக முக்கியமான திருப்புமுனையாகப் பார்க்கப்படுகிறது. அணைத் தண்ணீரில் மூழ்கி என்றென்றைக்குமாக அழியவிருந்த மலேசியாவின் ஆதி வரலாற்றை, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தங்களின் விடாமுயற்சியால் நூலிழையில் காப்பாற்றியுள்ளனர்.

3

4

5

கடலலைத் தாலாட்டும் டானாங்:

பெண் புத்தர் சிலையுடனான என் ஆன்மீகப் பயணம்

பயணங்கள் எப்போதும் நமக்கு புதிய மனிதர்களையும், புதிய கலாச்சாரங்களையும் அறிமுகப்படுத்துகின்றன. ஆனால், சில பயணங்கள் மட்டுமே நம் மனதிற்குள் ஒரு விவரிக்க முடியாத அமைதியையும், ஆன்மீகப் பரவசத்தையும் கடத்திச் செல்கின்றன. அப்படிப்பட்ட ஒரு மறக்க முடியாத அனுபவத்தை எனக்குத் தந்ததுதான், கடந்த மே 16 ஆம் தேதி நான் வியட்நாமின் டானாங் நகரில் கண்ட 'பெண் புத்தர் சிலை' (Lady Buddha Statue) **பயணம்.**

டானாங் நகரின் அழகிய கடற்கரைச் சாலையின் வழியே, குளிர்ந்த கடல் காற்று முகத்தில் மோத, சோன் ட்ரா தீபகற்பத்தை நோக்கி என் பயணம் தொடங்கியது. மலைப் பாதையில் பயணிக்கும் போதே, தூரத்தில் நீல நிறக் கடலின் பின்னணியில், வெள்ளை நிறத்தில் பிரம்மாண்டமாய் காட்சியளித்தார் பெண் புத்தர். அந்த முதல் பார்வையிலேயே என் பயணக் களைப்பு அனைத்தும் பறந்து போனது.

'லின் உங் பகோடா' வளாகத்திற்குள் நுழைந்ததும் அங்கிருந்த பௌத்த மதத்திற்கே உரிய அமைதியும் நேர்த்தியும் என்னை வரவேற்றன. அங்கு உலவியபோதுதான், இந்த பிரம்மாண்ட சிலை உருவானதற்கான மிகச் சுவாரசியமான உள்ளூர் வரலாற்றை அறிந்து கொண்டேன்.

ஒரு காலத்தில் டானாங் பகுதி மீனவர்கள் கடுமையான கடல் கொந்தளிப்பு, அலைகளின் சீற்றம் மற்றும் மீன்கள் கிடைக்காதது போன்ற பெரும் வாழ்வாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர். அப்போது ஒரு மீனவர் கடற்கரையில் கிளிஞ்சல்கள் மற்றும் சிப்பிகளுக்கு மத்தியில் கிடந்த ஒரு சிறிய பெண் புத்தர் சிலையைக் கண்டெடுத்துள்ளார். அதைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்று, தன் மனைவி மக்களுடன் பயபக்தியுடன் வழிபட்டு வந்துள்ளார்.

என்ன ஆச்சரியம்! அந்தச் சிலை கண்டெடுக்கப்பட்ட சில நாட்களிலேயே கடலின் கொந்தளிப்பு அடங்கியது. அந்த மீனவருக்கு வலையெங்கும் மீன்கள் வாரிக் குவிந்தன. இந்த அதிசயத்தை அவர் சக மீனவர்களிடம் கூற, அவர்களும் அந்தச் சிறிய சிலையை வணங்கி விட்டு கடலுக்குச் செல்லத் தொடங்கினர். அதன் பிறகு அவர்களின் வாழ்வில் வறுமை நீங்கி, மீன் வளம் பெருகியது. தாங்களைக் காத்த அந்தப் பெண் தெய்வத்திற்கு நன்றி செலுத்தும் விதமாகவே, பிற்காலத்தில் இந்த சோன் ட்ரா மலை உச்சியில் மிக உயரத்தில் இந்தப் பெண் புத்தர் சிலையை மக்கள் நிறுவினார்கள் என்ற கதை என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

நெருங்கிச் சென்று பார்க்கும்போதுதான் அந்தச் சிலையின் உண்மையான பிரம்மாண்டம் புரிந்தது. சுமார் 220 அடி (67 மீட்டர்) உயரத்தில், ஒரு பெரிய தாமரை பீடத்தின் மீது நின்ற கோலத்தில், கடலை நோக்கிப் பார்த்தபடி காட்சியளிக்கிறார் அந்தப் 'பெண் புத்தர்'. 30 மாடி கட்டிட உயரத்திற்கு இருக்கும் அந்தச் சிலையின் முகத்தில் வடிக்கப்பட்டிருந்த அமைதியும் கருணையும், பார்ப்பவர் யாரையும் கட்டிப் போடும் காந்தம் கொண்டது.

நான் அங்கு நின்றிருந்த போது, அந்தப் பிரம்மாண்டத்தை என் கேமராவில் புகைப்படமாகப் பதிவு செய்து கொண்டேன். நான் எடுத்த அந்தப் படம் வெறும் காட்சி அல்ல; அந்தத் தருணத்தில் என் மனம் உணர்ந்த அமைதியின் சாட்சி!

உள்ளூர் மக்கள் இந்தத் தெய்வம் தங்களைக் காக்கும் அரண் என்று நம்புவதற்கு மற்றொரு வலுவான சமகால வரலாற்று நிகழ்வும் சான்றாக உள்ளது. கடந்த 2014 ஆம் ஆண்டு, உலகையே உலுக்கிய 'ஹையான் புயல்' (Typhoon Haiyan) வியட்நாமை, அதிலும் குறிப்பாக டானாங் நகரை மிக உக்கிரமாகத் தாக்கும் என்று உலக வானிலை ஆய்வு நிபுணர்கள் ஆருடம் கூறினர். அது டானாங்கிற்குப் பேரிழிவாக மாறும் என்று அனைத்துலக அளவில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன.

உலகமே அஞ்சியபடி, ஹையான் புயல் மிகுந்த வீரியத்துடன் டானாங் கடற்கரையை நோக்கிச் சீறிப் பாய்ந்து வந்தது. ஆனால், கடலை நோக்கி நின்றிருக்கும் இந்தத் தாய் தெய்வத்தின் எல்லையைக் கடந்ததும், புயல் டானாங் நகரைத் தாக்காமல் திடீரென தன் திசையை மாற்றிப் பின்வாங்கியது என்று டானாங் மக்கள் இன்றும் சிலிர்ப்புடன் கூறுகிறார்கள். அறிவியல் கடந்த ஓர் ஆன்மீகப் பேரதிசயமாக இந்த நிகழ்வு டானாங் மக்களின் மனதில் பதிந்துள்ளது.

மலை உச்சியில் இருக்கும் அந்த வளாகத்தில் இருந்து கீழே பார்க்கும் போது, ஒட்டுமொத்த டானாங் நகரமும், அதன் நீல நிறக் கடற்கரையும் கண்கொள்ளாக் காட்சியாக விரிந்தன. மலையிலிருந்து வீசிய காற்றும், பகோடாவின் அமைதியும், கடலின் பரப்பும் சேர்ந்து எனக்குள் ஒரு புதிய ஆற்றலை நிறைத்தன.

வியட்நாம் பயணத்தின் பல நினைவுகள் என் மனதில் இருந்தாலும், சோன் ட்ரா மலையிலிருந்து கருணையோடு உலகைப் பார்க்கும் அந்தப் பெண் புத்தரின் முகமும், அந்த மீனவர்களின் நம்பிக்கையும், நான் எடுத்த புகைப்படமும் என் வாழ்நாளின் மிகச் சிறந்த ஆன்மீகப் பயண நினைவுகளாக என்றும் நிலைத்திருக்கும்!

- இ.எம்.சாமி

இருள் கிழித்து எழும் ஒற்றைச் சூரியன்கள்

வாழ்க்கைத் துணையின் எதிர்பாராத மறைவு என்பது ஒரு பெண்ணின் வாழ்வில் ஏற்படும் ஆகப் பெரும் பேரிடி. கணவர் இல்லாத சோகம் ஒருபுறம் நெஞ்சை அழுத்த, மறுபுறம் சமூகத்தின் புதிய அணுகுமுறைகளும் பார்வைகளும் அவர்களை மேலும் பயம் கொள்ளச் செய்யும். இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், குழந்தைகளின் கல்வி, எதிர்கால வாழ்வு, கடன்கள் உள்ளிட்ட அன்றாட நிதர்சனங்களை எதிர்கொண்டு, மன ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெண்கள் தங்களை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்துவது சாத்தியமே.

இதற்கு முதற்படியாக, துயரத்தை மனதுள்ளேயே பூட்டி வைக்காமல் நம்பிக்கைக்குரிய குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களிடம் பேசிப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சமூகத்தின் தேவையற்ற விமர்சனங்களை முற்றிலுமாகப் புறந்தள்ளி, தங்களின் பலவீனம் குழந்தைகளுக்குப் பயத்தை உண்டாக்கிவிடக்கூடாது என்ற ஒற்றை இலக்குடன் தைரியத்தை வரவழைத்துக் கொள்வது அவசியம்.

அடுத்ததாக, நிதி நிலைமையை முழுமையாக ஆராய வேண்டும். வங்கிக் கணக்குகள், காப்புறுதிகள், நிலையான வைப்புத் தொகை, ஊழியர் சேமநிதி போன்ற விவரங்களைச் சேகரித்து, கணவர் பெயரில் உள்ள சொத்துக்கள் மற்றும் முதலீடுகளைத் தன் பெயருக்கோ அல்லது குழந்தைகளின் பெயருக்கோ மாற்றுவதற்கான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை உடனே தொடங்க வேண்டும்.

கணவர் பெயரில் உள்ள கடன்கள் குறித்து வங்கிகளை அணுகிப் பேச வேண்டும். பல வீட்டுக் கடன்களுடன் ஆயுள் காப்புறுதி இணைக்கப்பட்டிருக்கும் என்பதால், கணவர் மறைந்தால் அந்தக் காப்புறுதித் தொகையே கடனை முழுமையாக அடைத்துவிடும் வாய்ப்புகள் உண்டு. இதர கடன்கள் இருந்தால், வங்கியிடம் பேசி தவணைத் தொகையைக் குறைக்கவோ அல்லது வட்டிச் சலுகை பெறவோ கோரிக்கை விடுக்கலாம்.



குழந்தைகளின் கல்விச் செலவுகளைக் கணக்கிட்டு, தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப பட்ஜெட் போட வேண்டும். அரசு மற்றும் தொண்டு நிறுவனங்கள் வழங்கும் கல்வி உதவித் தொகைகள், விதவைகளுக்கான மாதாந்திர நிதியுதவிகள் குறித்து விசாரித்து விண்ணப்பிக்க வேண்டும். வேலைக்குச் செல்லாத பெண்களாக இருந்தால், தங்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப வேலை தேடத் தொடங்க வேண்டும் அல்லது தையல் கலை, சமையல், ஆன்லைன் வணிகம் போன்ற சுய வேலை வாய்ப்புகளைக் கற்றுக் கொண்டு வீட்டிலிருந்தபடியே வருமானம் ஈட்ட முயற்சிக்கலாம். வருமானம் வரத் தொடங்கியதும், அதில் ஒரு பகுதியை அவசர காலத் தேவைகளுக்காகத் தனியாகச் சேமித்து வைக்க வேண்டும்.

ஒரு கதவு அடைக்கப்பட்டால் மறு கதவு திறக்கும் என்பது உலக நியதி. துணையை இழந்த சோகம் ஆயுள் வரை மறையாது என்றாலும், தன் பிள்ளைகளின் முகத்திற்காகப் பெண்கள் துணிச்சலுடன் எழுந்து நிற்க வேண்டும். முறையான நிதித் திட்டமிடலும், மன உறுதியும் இருந்தால், எந்தவொரு பெண்ணாலும் இந்த நிதர்சனமான வாழ்வை வென்று காட்ட முடியும்.

ஜோதிடத்தில், 12 ராசிகளின் தன்மைகளுடன் சில பழங்கள் குறியீட்டு முறையில் தொடர்புப்படுத்தப்படுகின்றன. உங்களுக்குப் பிடித்த பழம் உங்கள் குணத்தை அறிவியல் ரீதியாகத் தீர்மானிக்காது என்றாலும், உணவுத் தேர்வையும் ராசி நம்பிக்கைகளையும் இப்படி ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு சுவாரஸ்யமான பொழுதுபோக்குதானே! உங்கள் ராசிக்கு எந்தப் பழம் பொருந்துகிறது என்பதை இந்தச் செய்திக் கட்டுரையில் தெரிந்து கொள்வோம் வாங்க!

உங்களைப் பிடித்த பழம் என்ன சொல்கிறது?

சொல்லுங்க, சொல்லுங்க... உங்களுக்குப் பிடித்த பழம் எது? வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அதையேதான் விரும்பித் தேர்ந்தெடுப்பீர்களா?

மேஷம்

ஸ்ட்ராபெர்ரி: தன்னம்பிக்கை, சுறுசுறுப்பு மற்றும் உற்சாகம் நிறைந்தவர்கள். ஸ்ட்ராபெர்ரியின் பிரகாசமான தோற்றம் மேஷத்தின் சுறுசுறுப்பான தன்மையைக் குறிக்கிறது.

ரிஷபம்

மாம்பழம்: வசதி, மகிழ்ச்சி மற்றும் வாழ்க்கையின் எளிய இன்பங்களை மெதுவாக ரசித்து வாழ்வதில் ஆர்வம் கொண்டவர்கள்.

ஆரஞ்சு:

ஆர்வம், சமூகத்தன்மை மற்றும் புத்துணர்ச்சியுடன் புதிய அனுபவங்களைத் தேடுபவர்கள்.

கடகம்

தர்பூசணி: குடும்பம், வீடு மற்றும் நெருக்கமான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அவற்றுடன் நேரத்தைச் செலவிடுவதை விரும்புபவர்கள்.

சிம்மம்

அன்னாசிப்பழம்: தனித்துவமான தோற்றமும் படைப்பாற்றலும் கொண்டு, எதிலும் சற்று வித்தியாசமாகத் திகழ விரும்புபவர்கள்.

கன்னி

ஆப்பிள்: நடைமுறைச் சிந்தனை, ஒழுங்கு மற்றும் சிறிய விஷயங்களிலும் கவனமாக இருக்கக்கூடிய எளிய இயல்புடையவர்கள்.

துலாம்

பீச்: அழகு, சமநிலை, இணக்கமான சூழல் மற்றும் இனிமையான அனுபவங்களை விரும்புபவர்கள்.

மகரம்

அத்திப்பழம்: பொறுமை, ஒழுக்கம் மற்றும் பாரம்பரியத்துடன் நீண்டகால இலக்குகளில் கவனம் செலுத்துபவர்கள்.

விருச்சிகம்

மாதுளை: ஆழமான சிந்தனை மற்றும் தீவிர உணர்வுகளுடன் எதிலுமே அதன் ஆழத்தை அறிய விரும்புபவர்கள்.

கும்பம்

கிவி: தனித்துவம், சுயசிந்தனை மற்றும் வழக்கத்திற்கு மாறான புதிய யோசனைகளை முயன்று பார்ப்பவர்கள்.



மீனம்

திராட்சை: கற்பனைத் திறன், உணர்வுப்பூர்வமான தன்மை மற்றும் அன்பான உறவுகளை விரும்பும் அமைதியான மனதுக்காரர்கள்.

தனுசு

பப்பாளி: சாகசம், சுதந்திரம் மற்றும் புதிய இடங்களை முயற்சி செய்யத் துடிக்கும் ஆர்வம் கொண்டவர்கள்.

முடிவுரை: நமக்குப் பிடித்த உணவுகளைத் தேர்வு செய்வதற்குச் சிறுவயது நினைவுகள், குடும்பப் பழக்கங்கள் மற்றும் தனிப்பட்ட சுவை எனப் பல காரணங்கள் இருக்கலாம். அதனுடன் இந்த ஜோதிட நம்பிக்கைகளையும் ஒரு சுவாரஸ்யமான கோணத்தில் சேர்த்துப் பார்க்கலாம். அடுத்த முறை உங்களுக்குப் பிடித்த பழத்தை உண்ணும்போது, உங்கள் ராசியுடன் அது பொருந்துகிறதா என்று ஒருமுறை யோசித்துப் பாருங்கள். அது உங்களுக்கு ஒரு புதிய மகிழ்ச்சியையும் சுவாரஸ்யத்தையும் தரும்!

Published by: Eye Mag Publication Sdn Bhd (1397097-V) No 73-2, Jalan Prima SG 3, Prima Sri Gombak, 68100 Batu Caves, Selangor, Tel: 03-61811414
Email: Admin@thisaigalnews.com Printed by Twinstar Synergy Sdn Bhd (987235X) Lot 2A, Jalan 13/2A, 46200 Petaling Jaya, Selangor.